விலை: 30.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 061 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 06 வெள்ளிக்கிழமை (18.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பொறுப்பற்று பயன்படுத்த வேண்டாம்

### கோட்டா ஆலோசனை வழங்கியுள்ளதாக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்துடன் தெளிவான தொடர்புள்ளது என்றால் மாத்திரமே பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பயன்படுத்துமாறு அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சில்கடந்தசெவ்வாய்க்கிழமை நடைபெற்ற பிரதேச சிவில் அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற சந்திப்பில் அமைச்சர் பீரிஸ் இதனை குறிப்பிட்டுள்ளார். 15

### துணைவேந்தரின் உறுதியை அடுத்து

## யாழ். பல்கலை மாணவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

துணைவேந்தரின் உறுதிமொழியை அடுத்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்திருந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

மாணவர் ஒன்றியத்தை மீளப் புதுப்பிப்பதற்கு அனுமதிக்குமாறு பல்கலை மாணவர்கள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மாணவர்களது போராட்ட இடத்திற்கு சென்று. 15

### தொலைபேசி அழைப்பை நம்பி

## யாழில் பணத்தை இழந்த இருவர்

(யாழ்ப்பாணம்)

தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட இனந் தெரியாத நபர்களை நம்பி சித்தங்கேணி மற்றும் நவாலி, சங்கரத்தை, துணைவி பகுதிகளை சேர்ந்த இருவர் பணத்தைப் பறிகொடுத்துள்ளனர். குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி சம்பவங்கள் தொடர் 15

# ஐ.நாவை சமாளிக்க அரசாங்கம் தயார்

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும



*(கொழும்பு)*

ஜெனிவாவில் இம்முறை இலங்கைக்கு எதிராக எந்தப் பிரேரணைகளும் கொண்டுவரப்படமாட்டா. எனினும் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இம்முறை இலங்கைக்கு எதிராக ஏதாவது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் அதை எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கின்றோம்.

இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

*(15 ஆம் பக்கம் பார்க்க)*

### யாழ். போதனாவில்

## பிசிஆர் சோதனைக்கு இன்றுமுதல் ரூ.6,500

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிசிஆர் பரிசோதனையை மேற்கொள்வோரிடம் இன்று வெள்ளிக்கிழமை முதல் 6,500 ரூபாய் அறவிடப்படும் என வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.நந்தகுமாரன் அறிவித்துள்ளார்.

மத்திய சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இக்கட்டணம் அறவிடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கடந்த தினங்க 15

## கொரோனா 27 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 27 கோவிட் மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. 15

## கச்சதீவுத் திருவிழாவில் பங்கேற்க பத்தர்களுக்கு அனுமதி இல்லை

### அமைச்சர் டக்ளஸ் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கச்சதீவுத் திருவிழாவில் பங்கேற்க இலங்கை மற்றும் தமிழக யாத்திரிகர்களுக்கு இம்முறை அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவும் அருட்தந்தைகளின் பங்கேற்புடன் மாத்திரம் திருவிழாவை நடாத்துவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் 15

## நாட்டில் மேலும் +1,235 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனா தொற்று உறுதியான மேலும் 1,235 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய 15

### அரச பங்காளிகள்

## அமைச்சர் விமல் வீட்டில் அவசர கலந்துரையாடல்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசில் அங்கம் வகிக்கும் கூட்டணிக் கட்சிகளின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களின் அவசர சந்திப்பு அமைச்சர் விமல் வீரவன்சவின் இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

நடைபெற்ற இந்தச் சந்திப்பில் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பாரதூர 15

## அமைச்சர் நிமல் வடக்குக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நாளை வடக்குக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் தொழிலாளர் சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை மற்றும் அங்கு சேவை 15

## பயங்கரவாத சட்டத்தை உடனடியாக நீக்குக

### பேராயர் ரஞ்சித் ஆண்டகை

(கொழும்பு)

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும் அல்லது முழுமையாக மாற்றப்பட வேண்டும். ஏனெனில் இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி குற்றவாளிகளைத் தப்பவிட்டு அப்பாவிகளையே ஆட்சியாளர்கள் சிறையில் அடைத்து வருகின்றனர்."

இவ்வாறு கொழு 15


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

● வடக்கு மக்களின் பிரச்சினை தொடர்பில்

# வெளிப்படைத்தன்மையுடன் கலந்துரையாடல் நடத்தப்படும்

## ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாணத்தில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் சமூக அமைப்புகளுடன் வெளிப்படைத்தன்மையுடன் கலந்துரையாடல் நடத்தப்படும் என வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சிவில், துறைசார் குழுக்களுடன் குறித்த கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு வழங்கிய முறைப்பாடுகள் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் மக்கள் மத்தியில் குறித்த விடயங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட உள்ளது.


சமைத்த உணவின் விலை, தொழில்முனைவோர், கூட்டுறவு சங்கங்களை ஊக்குவித்தல், பண்ணை விலை மற்றும் காய்கறிகளின் சில்லறை விலை, விவசாயிகளுக்கான செலவுகள், விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள், அத்தியாவசிய உள்ளீடுகளின் செலவுகள், விவசாய சேவைகள் துறை, வட மாகாண விவசாய அமைச்சகத்தின் திட்டங்கள், படகுகள் பழுது, நிதியுதவி, நங்கூரம், குளிர் பதனம், தொழில், திட்டங்கள் ஆகியவை குறித்து வெளிப்படையாக விவாதிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-104)

## பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக சாவகச்சேரியில் கையெழுத்துப் பேரணி

(சாவகச்சேரி)

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கக்கோரிய கையெழுத்துப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் சாவகச்சேரி நகரில் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்ட கையெழுத்துப் போராட்டத்தில் சாவகச்சேரித் தொகுதி தமிழரசுக் கட்சிக் கிளை செயலாளர் ச.தங்கராசா



கையெழுத்திட்டு போராட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இலங்கையில் இருக்கும் சட்டங்களில் மிக மோசமான கொடூரமான சட்டமான பயங்கரவாத தடைச்சட்டம் தற்போது அரசியல் பழிவாங்கல்கள், அரசியல்வாதிகளின் தனிப்பட்ட விரோதிகளுக்கு எதிராக பயன்படுத்தப்படும் நிலை காணப்படுவதாகவும் இப்படியான ஒரு சட்டம் நாட்டில் இருக்கக்கூடாது.

நீங்கள் இடும் ஒவ்வொரு கையெழுத்தும் உங்கள் சகோதர - சகோதரியை கொடூரமான இந்தச் சட்டத்திற்கு இரையாகாமல் இருப்பதில் இருந்து பாதுகாக்கும் எனவும் நிகழ்வில் கலந்து கொண்ட முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கே.சயந்தன் வலியுறுத்தியிருந்தார்.

மேலும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி இ.சிவமங்கை, சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

நகர வர்த்தகர்கள், பொதுமக்கள் பலரும் ஆர்வமாக குறித்த தடைச்சட்டத்திற்கு எதிராக கையெழுத்திட்டிருந்தனர். (ம-30)

## இந்தியாவில் திருமண நிகழ்வில் துயரம் கிணற்றில் விழுந்த 13 பேர் மரணம்

(குஷிநகர்)

இந்தியாவின் உத்தர பிரதேச மாநிலத்தில் உள்ள, குஷிநகர் பகுதியில் திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்டிருந்த சிறுமிகள், பெண்கள் உட்பட 13 பேர் கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்தமை பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குஷிநகர், நெபுவா நவுராங்கியா பிரதேசத்தில் நேற்றிரவு 8.30 மணியளவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர்களில் 7 பெண்களும் ஒரு வயது குழந்தை மற்றும் 10 வயது சிறுமியொருவர் உட்பட 6 சிறுவர்களும் அடங்குவதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி திருமண நிகழ்வில் கலந்து கொண்டவர்கள், அங்கிருந்த கிணற்றின் மேல் இடப்பட்டிருந்த கொங்றீட் தளத்தின் மீது நின்றுகொண்டிருந்தபோது, பாரம் தாங்க முடியாமல் அது உடைந்து வீழ்ந்ததில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, கிணற்றுக்குள் வீழ்ந்த 13 பேரும் உயிரிழந்துள்ளனர். (ம)

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கலைநதி நூல் வெளியீடு இன்று

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்து மாமன்றத்தின் கலைநதி நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெறும்.

ஆசிரிய மாணவன் கு.சிவரூபன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீ.கருணைலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

ஆசியுரையை தவத்திரு வேலன் சுவாமிகள், வாழ்த்துரையை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி தி.ஜெயகாண்டீபன், தொடக்கவுரையை கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன், வெளியீட்டுரையை யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் ம.நிரேஸ்குமார், நூல் நயப்புரையை வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம், ஏற்புரையை கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளரும் இந்து மாமன்றக் காப்பாளருமான திருமதி ஜானகி தர்மஜீலன், நூலாசிரியர் உரையை ஆசிரிய மாணவன் நி.பாபுதரன், நன்றியுரையை ஆசிரிய மாணவன் வ.துஷ்யந்தன் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

நூலின் முதற்பிரதியை கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் க.செந்தில்குமரன் பெற்றுக் கொள்வார். (ம)

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற மத்திய குழு கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

தேசிய சம்பளக்கொள்கையை அரசாங்கம் மீறியமை உள்ளிட்ட விடயங்களுக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையொன்றை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக அதன் மத்தியகுழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் பிரசாத் தெரிவித்தார். (ம)

## அருட்தந்தை ஜூட்டிடம் வாக்குமூலம் பதிவு

அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் சுமார் 3 மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

ஈஸ்டர் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொறுப்புக்கூற வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வெளியிட்ட கருத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த குற்றப்புலனாய்வுதிணைக்களத்தில் முறைப்பாடு செய்திருந்தார். (ம)


## உடனடி வேலை வாய்ப்பு

தயாரித்த சிறுவர், சிறுமியர், நவநாகரீக நங்கைகளின் ஆடைகளை விற்பனை செய்வதற்கு ஆண், பெண் இருபாலாரிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

- கணக்கு லிகிதர் (A/C CLERK)
- பணியாளர்களின் மேற்பார்வையாளர் (Supervisor)

முன்அனுபவம், கல்வி அறிவு க.பொ.த உயர்தரம், சாதாரண தரம் படித்தவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். அனுபவம் இல்லாதவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். விண்ணப்பதாரிகள் 20.02.2022 இற்கு முன்னதாக தொடர்பு கொள்ளவும்.

**குறிப்பு : யாழ். நகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விண்ணப்பித்தல் நல்லது.** (10231)

- 074 099 1852


## முடங்கியது வீரவன்ஸவின் முகநூல்

(கொழும்பு)

அமைச்சர் விமல் வீரவன்ஸவின் முகநூல் கணக்கு ஹெக் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சர் வீரவன்ஸவின் தனிப்பட்ட முகநூல் கணக்கிற்குள் எவரோ பிரவேசித்துள்ளதாகவும் சில நாட்களாகவே தம்மால் முகநூலை பயன்படுத்த முடியவில்லை என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முகநூல் கணக்கிற்குள் பிரவேசித்தவர் அதனை பயன்படுத்த முயற்சித்துள்ளார் என குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் மீண்டும் முகநூல் கணக்கின் கட்டுப்பாட்டை தாம் பெற்றுக்கொண்டுள்ளதாக அமைச்சர் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதியையே கேட்கின்றனர் தமிழ் மக்கள்

# பொறுப்புக் கூற தவறிவிட்டது இலங்கை அரசு

## ஐ.நாவின் முன்னாள் விசேட அறிக்கையாளர் பாப்லோ டி கிரீஃப்

(ஜெனிவா)

**இலங்கையில் பாதிக்கப்பட்ட தரப்பினரின் நீதிக்கான கோரிக்கை மிகவும் வலுவாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் விசேட அறிக்கையாளர் பாப்லோ டி கிரீஃப் வலியுறுத்தியுள்ளார்.**



அதுமாத்திரமன்றி கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஜனாதிபதியும் பிரதமரும் நிலைமாறுகாலநீதி தொடர்பில் தெளிவான பொறிமுறையொன்றை உருவாக்கத் தவறிவிட்டதாகச் சுட்டிக்காட்டியுள்ள அவர், "விரிவான ஓரின முறைமையின்" ஊடாக நீதியையோ, பாதுகாப்பையோ அடைந்துகொள்ள முடியாது என்பதைப் பெரும்பான்மையினர் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். கடந்த செவ்வாய்க் கிழமை நிகழ்நிலை ஊடான கலந்துரையாடலின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் கூறியதாவது, கடந்த காலங்களைப் பொறுத்தமட்டில் இலங்கையின் பெரும்பாலான அரசாங்கங்கள் சர்வதேசத்தின் பொதுநிலைப்பாட்டைத் திருப்திப்படுத்துவதில் கவனம் செலுத்தினார்களே தவிர, அவர்களுக்குரிய கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் அவதானம் செலுத்தவில்லை.

இவ்விடயத்தில் இன்றளவிலே பதிவாகும் விடயங்கள் மேலும் மோசமடைந்துள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் எதிர்வரும் மார்ச்மாதக் கூட்டத்தொடரை இலக்காகக்கொண்டு, அதில் தமக்கு ஆதரவை வழங்குமாறுகோரி இலங்கையின் இராஜதந்திரிகள் ஏனைய சர்வதேச நாடுகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இருப்பினும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் அதன் வளங்களை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.

காணாமல்போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் என்பன ஸ்தாபிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகமும் உருவாக்கப்பட்டது.

இருப்பினும் அது உரியவாறான பொறிமுறையொன்றைக் கொண்டிருக்கவில்லை. அதுமாத்திரமன்றி அதன் பொறிமுறையைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான மிகச்சொற்பளவான பணிகளை மாத்திரமே செய்ய முடியும். இவ்வாறானதொரு பின்னணியில் இச்செயன்முறையில் எத்தகைய பங்களிப்பினை வழங்க முடியும் என்பது குறித்து இலங்கையில் இயங்கும் சிவில் சமூக அமைப்புக்களுக்கு மாத்திரமன்றி இதனுடன் தொடர்புடைய சர்வதேச தரப்பினருக்கும் சில பரிந்துரைகளை முன்வைக்க விரும்புகின்றேன்.

இதுவிடயத்தில் இலங்கையை சரியான பாதையில் நகரச்செய்வதற்கான வலுவான அழுத்தங்களைப் பிரயோகிப்பதில் ஐக்கிய நாடுகள் சபையினால் மிகையான பங்களிப்பை வழங்க முடியும். இதில் வெவ்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் ஐ.நா.தலைமைக் காரியாலயம் எவ்வாறு செயற்பட்டது என்பதை விளக்குவது கடினம் என்பதோடு, அது பெருமளவிற்குப் பயன்தராது.

மறுபுறம் இலங்கையின் சிவில் சமூகங்கள் மிகவும் விரிவானவையாகக் காணப்படுகின்ற போதிலும், அவை ஓர் வலையமைப்பாக உருவாகுதற்குத் தவறியிருக்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் "விரிவான ஓரின முறைமையின்" ஊடாக நீதியையோ அல்லது பாதுகாப்பையோ அடைந்து கொள்ள முடியாது என்பதைப் பெரும்பான்மையினத்தவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட தரப்பினர் பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும் என்று கோரவில்லை. மாறாக பொருளாதார ரீதியிலான அபிவிருத்தியே அவர்களது எதிர்பார்ப்பாகவும் விருப்பமாகவும் இருக்கின்றது என்று முன்னைய ராஜபக்ஷ அரசாங்கம் கூறியது.

ஆனால் அது முற்றிலும் பொய்யானது என்பதுடன் தற்போதும் எதிர்காலத்திலும்கூட அது சாத்தியப்படாது. எனவே பாதிக்கப்பட்டவர்களின் நீதிக்கான கோரிக்கை மிகவும் வலுவாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் வலியுறுத்தினார். (நி)

# ஜெனிவா அமர்வை முன்னிட்டு நீதி கோரி ஐ.நா.நோக்கி பயணம்



(லண்டன்)

ஜெனிவா அமர்வை முன்னிட்டு தமிழ் மக்களுக்கு நீதி கோரும் மனிதநேய ஈருருளிப் பயணப் போராட்டம் நேற்று முன்தினம் 24 ஆவது தடவையாக பிரித்தானிய தலைநகர் லண்டனில் இருந்து புறப்பட்டது.

பிரித்தானியப் பிரதமர் இல்லத்தின் முன்னால் நடத்தப்பட்ட ஒரு கவனயீர்ப்பு போராட்டத்துடன் ஆரம்பமாகியுள்ள இந்தப் பயணம் ஐ.நா. மனித உரிமை பேரவையை நோக்கி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஐரோப்பிய ஆறு நாடுகளூடாக பயணத்தை மேற்கொள்ளவுள்ள செயற்பாட்டாளர்கள் மார்ச் 7 ஆம் திகதியன்று ஜெனிவாவை சென்றடைய திட்டமிட்டமிட்டுள்ள நிலையில், இந்தப் பயணத்துக்கு மக்கள் ஆதரவு கோரி அதன் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

முதலில் நெதர்லாந்துக்கு செல்லும் ஈருருளிப் பயண குழு அதன் பின்னர் பெல்சியம், ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் அரச மற்றும் அரச சார்பற்ற பிரமுகர்களுடன் சந்திப்புக்களை நடத்திய பின்னர் சுவிஸில் ஐ.நா.மன்றத்திற்கு முன்பாக உள்ள ஈகைப் பேரொளி முருகதாசன் திடலில் மார்ச் 7 ஆம் திகதி நடைபெறும் பேரணியிலும் கவனயீர்ப்புப் போராட்டத்திலும் இணையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மாணவர் ஒன்றியத்தை புதுப்பிக்க அனுமதிகோரி

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்







(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் மாணவர் ஒன்றியத்தை மீளப் புதுப்பிப்பதற்கு அனுமதிக்குமாறு கோரி மாணவர்களால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயிலை மறித்து நேற்று கலைப்பீட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 4 மாதங்களாக மாணவர் ஒன்றியம் இயங்காதுள்ளமையால், அதனை மீள செயற்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு பல்கலைக்கழக மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-33-18-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணம் -2021

## மேற் பிரிவு இறுதிப்போட்டியில் AB அணி வெற்றி

கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம், 28 ஆவது வருடமாக நடத்துகின்ற 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்ற போட்டியில் AB அணியும் ஓல்ட்கோல்ஸ் அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓல்ட் கோல்ஸ் அணி 29.4 ஓவர்களில் சகல இலக்குளையும் இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றது.

மதூஸன்-15, நிமலேந்திரன்-73, நிரோஸன்-35, பிரியலக்ஸன்-59 ஓட்டங்களைப் பெற்றனர்.

சிலோஜன்-05, சயந்தன், உத்தமன் தலா 02 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய AB அணி 29.4 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 225 ஓட்டங்களை பெற்றனர்.



போட்டியின் சிறந்த வீரராக சிலோஜன் தெரிவு

ஞானானந்த சர்மா-26, ஆதித்தன்-58, சிலோஜன்-62, உத்தமன்-22 ஓட்டங்களை பெற்றனர்.

நிரோஸன்-04, நிலக்ஸன்-03, ஜின்துஸன்-02, இலக்கினை கைப்பற்றினர்.

போட்டியின் சிறந்த வீரராக சிலோஜன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற AB அணி, கீழ்ப்பிரிவு இறுதிப் போட்டியில் தோல்வியடைந்த மூளாய் விக்டோறி அணியுடனும் அரை இறுதிப் போட்டியில் கலந்து கொள்வர்.

தோல்வியடைந்த ஓல்ட் கோல்ஸ் அணி கீழ்ப்பிரி வில் வெற்றி பெற்ற யாழ். ஜொனியன்ஸ் அணியுடனும் அரையிறுதிப் போட்டியில் கலந்து கொள்வர். (6)

# 6 விக்கெட் வித்தியாசத்தில்

## மே.கிந்தியத்தீவை வீழ்த்தியது இந்தியா



இந்தியா, மேற்கிந்திய தீவு கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான முதலாவது இருபது-20 போட்டி கொல்கத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற இந்திய அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

முதலில் பட்டிங் செய்த மேற்கிந்திய தீவு அணி 20 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 157 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக நிகோலஸ் பூரன் 61 ரன்கள், மேயர்ஸ் 31 ரன்களும், கப்டன் கிரன் பொல்லார்ட் 24 ரன்களும் சேர்த்தனர்.

இதையடுத்து 158 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணியின் துவக்க வீரர்களான கப்டன் ரோகித் சர்மா, இஷான் கிஷன் இருவரும் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ரோகித் சர்மா 19 பந்துகளில் 40 ரன்கள், இஷான் கிஷன் 35, விராட் கோலி 17, ரிஷப் பண்ட் 8 ரன்களில் வெளியேறினர்.

பன் ஜோடி சேர்ந்த சூர்ய குமார் யாதவ் ஆட்டமிழக்காமல் 34 ரன்களும், வெங்கடேஷ் அய்யர் ஆட்டமிழக்காமல் 24 ரன்களும் சேர்த்தனர். 19 ஆவது ஓவரின் கடைசிப் பந்தில் சிக்சர் அடித்து வெற்றியை உறுதி செய்தார் வெங்கடேஷ் அய்யர்.

இந்திய அணி 7 பந்துகள் மீதமிருந்த நிலையில், 4 விக்கெட் இழப்பிற்கு 162 ரன்கள் சேர்த்தது. இதனால் 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 3 போட்டி கொண்ட இருபது-20 தொடரில் இந்தியா 1-0 என முன்னிலையில் உள்ளது. (6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2516

### ரஞ்சன்

தேரடி வீதியில் தேவதை வந்தா திருவிழானு தெரிஞ்சுக்கோ...



அரக்க பரக்க ரோட்ட போட்டா தேர்தல் வருதுனு புரிஞ்சிக்கோ...


### மிதுனா

ஆயிரம் கோபத்தோட இருக்கையில் சத்தமில்லாமல் முத்தமிட்டு இப்ப ஒகே வா கோபம் போயிருச்சா... என தலைசாய்த்து கண் சிமிட்டி கேட்கும் மகள் வரமே...



### சதீஸ்

முதல் மற்றும் மூன்றாம் தலைமுறையினரை இணைக்கும் விளையாட்டு கண்ணாமூச்சி...



### ராஜினி

வெட்டியா இருக்கும்போது வேலைக்கு போறவனை பாத்தா பொறாமையா வருது...



வேலைக்குப்போனா வெட்டியா இருக்கிறவனை பாத்து பொறாமை வருதே...

### விஹுஷன்

காசு கொடுத்தும் சாப்பாடு கிடைக்காத நிலைமை வரும் பொழுதுதான் விவசாயியோட அருமை தெரியும்



விவசாயியையும் விவசாயத்தையும் நேசிப்போம்

### தர்மினி

நம்ம டீச்சருக்கு என்ன ஆச்சு? ஏன் கேக்கிறாய்...



நண்பா ஸ்கூல் படிக்கும் போது ஒரு 5 ரூபா 10 ரூபால இருந்த சுகமே தனி சுகம் நண்பா...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுலா சென்ற இளைஞர் நிலாவெளி கடலில் மூழ்கி பலி

(திருமலை)

திருகோணமலை - நிலாவெளி கடலில் நீராடச்சென்று காணாமல்போன இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். மாத்தளையிலிருந்து சுற்றுலா சென்றிருந்த சிலர், நேற்று முன்தினம் பிற்பகல் நிலாவெளி கடலில் நீராடச் சென்றுள்ளனர்.

இதன்போது ஒருவர் கடல் அலையில் அள்ளுண்டு சென்ற நிலையில், அவரை காப்பாற்ற 2 நண்பர்கள் முயற்சித்துள்ளனர். அதன்போது மூவரும் கடல் அலையில் அள்ளுண்டு சென்றபோது, பொலிஸ் உயிர் காக்கும் பிரிவினரால் இருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதில் கண்டி- தலாது ஓயா பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமல் போயிருந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். (நி)


## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி. செ. கிருஸ்ணாயினி அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி

**சிவக்கொழுந்து தட்சணாமூர்த்தி**

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-3795)

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்.



## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.கணேசலிங்கம் சதீஸ் அவர்களின் பாசமிகு தாயார்

திருமதி.

**சரஸ்வதி கணேசலிங்கம்**

அவர்கள் மறைவுற்றதால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-3796)

உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம், நல்லூர்.


# வேகமாக அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்

## 60 சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவு அபாய வலயங்களாக அடையாளம்

(கொழும்பு)

**டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வரும் நிலையில், 60 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் அதிகூடிய எச்சரிக்கை வலயங்களாக தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு அடையாளப்படுத்தியுள்ளது.**

கடந்த முதலாம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 925 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதனை தொடர்ந்து 7 ஆம்திகதியிலிருந்து 13 ஆம்திகதி வரையான காலப்பகுதியில் 634 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் 51 சதவீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என தொற்றுநோய் விஞ்ஞான பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# பாராளுமன்ற கூட்டத்தொடர் 22 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

பாராளுமன்ற கூட்டத் தொடரை எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

# எரிபொருட்களின் விலைகளை அதிகரிக்கவும்

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரிக்கை

(கொழும்பு)

உலக சந்தையில் எரிபொருளின் விலை வரலாற்றில் என்றுமில்லாத அளவுக்கு உயர்ந்துள்ளது.

இதன் காரணமாக நாட்டில் எரிபொருள் விலைகளை அதிகரித்தால், அது இலங்கை வரலாற்றில் மிகப் பெரிய எரிபொருள் விலை அதிகரிப்பாக இருக்கும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலையை 192 ரூபாய் வரையும் டீசலின் விலையை 169 ரூபாய் வரையும் கட்டாயம் அதிகரிக்க வேண்டும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கோரியுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்முறை எரிபொருள் விலைகளை அதிகரிக்க அனுமதி வழங்கப்படவில்லை என்றால், பொது போக்குவரத்து, முப்படைகள், பொலிஸ் துறை உட்பட அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் எரிபொருளை விநியோகிப்பது என தீர்மானிக்க நேரிடும் எனவும் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தற்போது, ஏற்பட்டுள்ள நிலைமை சம்பந்தமாக நிதியமைச்சு விளக்கியுள்ள போதிலும் இதுவரை எரிசக்தி அமைச்சுக்கு எந்தவித பதிலும் கிடைக்கவில்லை எனவும் கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

நாளுக்கு நாள் நட்டமடையும் நிறுவனமாக தொடர்ந்தும் இயங்க முடியாது என்பதால், மிகப் பெரிய அளவில் எரிபொருள் விலைகளை அதிகரிக்க வேண்டும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிசக்தி அமைச்சுக்கு அறிவித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# இராசிபலன்

18.02.2022
மாசி 06, வெள்ளிக்கிழமை
துதியை முன்னிரவு 11.26 மணிவரை
பூரம் பிற்பகல் 5.38 மணிவரை
சுபநேரம் -6.32-8.02 மணிவரை
இராகுகாலம் - 11.02-12.32 மணிவரை
சந்திராஷ்டமம்: திருவோணம், அவிட்டம்

வளவன்


மேஷம்

வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


ரிஷபம்

எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து வெற்றி காணும் நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


மிதுனம்

பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


கடகம்

குடும்பத்தில் கல கலப்பான சூழ்நிலை உருவாகும், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


சிம்மம்

அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடலாம், திடீர் பயணங்கள் ஏற்படலாம், கற்பனை மிகுதியான நாள்.


கன்னி

வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள், போசன சுகமுண்டு.


துலாம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆடம்பர பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செல்வ நிலை உயரும் நாள், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, ஆரோக்கியமான நாள்.


தனுசு

வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மன நிம்மதியை கொடுக்கும், சாதுரியமாக பேசி சாதனை [illegible] நாள்.


மகரம்

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.


கும்பம்

குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், புதிய பொருட் சேர்க்கை உண்டு.


மீனம்

அலுவலகப் பணிகள் தாமதமாகும், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமான நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீராகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எதையும் பொறுமையோடு தேடு, பொறாமையோடு தேடாதே



யா/கலட்டி மெதடிஸ் மிஷன் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பெற்றோர்களுக்கு உணவுப்பொதிகளும் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை யாழ்.மாவட்ட தேசோதயத் தலைவரும் யாழ்.மாநகரசபை உறுப்பினருமான லயன் கலாநிதி நா.தனேந்திரனால் அவரது மனைவியாரின் நினைவாகவும், மாணவர்களுக்கான கற்றல் உபகரணத்தை கனடாவில் வசிக்கும் அவரது பேரன் பிரபாகரன் எதினுசனின் 6 ஆவது பிறந்த தினத்திற்காகவும் வழங்கி வைக்கப்பட்டது.

# வெளிநாட்டு கடவுச்சீட்டு உடையோருக்கு பி.சி.ஆர்.மேற்கொள்ள 5000 ரூபாய்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா மருத்துவமனையில் வெளிநாட்டு கடவுச்சீட்டு உடையவர்களுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைக்காக 5 ஆயிரம் ரூபாய் அறவிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் பிரஜைகள் மட்டுமே இலவச சுகாதார சேவைக்கு உரித்தானவர்கள். வெளிநாட்டு பிரஜைகள் தங்கள் மருத்துவ செலவுகளுக்காக உரிய கட்டணங்களை அரசாங்க மருத்துவமனைகளுக்கு செலுத்தியே பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு கட்டணமாக 5000 ரூபாய் அறவிடப்படுகிறது.

இப் பணம் உரிய முறையில் அரசாங்கத்தின் கணக்கில் வைப்பிடப்படுகிறது.

யாழ்.போதனா மருத்துவமனையில் இச் சேவையைப் பெற்றுக் கொள்வோருக்கு பரிசோதனையில் எதிர்மறை (negative) முடிவாயின் நேரடியாக விமான நிலையம் செல்ல முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-6-33)

# வெளியீட்டுப் பணியகம் அங்குரார்ப்பணம் இன்று

(குப்பிழான்)

அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட வெளியீட்டுப் பணியகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு வெகுசன ஊடக அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் தலைமையில் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பல்பிட்டயவின் பங்குபற்றுதலுடன் இன்று 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.45 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்ட ஊடகவியலாளர்களுடனான சிநேகபூர்வ சந்திப்பும் நடைபெறும். (5-6-18-104)



ஒன்றிணைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்திய நிலையம் மற்றும் தொழிலாளர் போராட்ட மத்திய நிலையம் என்பவற்றின் ஏற்பாட்டில் அரசு ஊழியர்கள் தொடர்பான பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து துண்டுப்பிரசுர விநியோகம் நேற்று யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக மேற்கொள்ளப்பட்டது. (படம்-சிவசாந்தன், ரவிசாந்)

# நிர்வாகசபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சாரணர் சங்கத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு கடந்த 7 ஆம் திகதி மரபுவழித் தலைவரான அரச அதிபர் க.மகேசன் தலைமையில் அரச அதிபர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது தேசிய பிரதம சாரண ஆணையாளர் ஜனபிரித் பெர்னாண்டோ (சட்டத்தரணி) பிரசன்னத்தோடு சபைத் தெரிவுகள் இடம்பெற்றன.

இதில் தலைவராக (மரபுவழி) யாழ்.அரச அதிபர்-க.மகேசன், உப தலைவர்களாக செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்-இ.இளங்கோவன், மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர்-இ.இராஜசீலன் "கல்விக் காருண்யன்" கலாநிதி பி.நாகரட்ணம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மற்றும் நிர்வாக குழுத் தலைவராக உதவி கல்விப் பணிப்பாளர், (ஆங்கிலம்) பி.என்.சுதர்சன், செயலாளராக சாரணிய மாவட்ட ஆணையாளர் செ.தேவரஞ்சன், பொருளாளராக ஓய்வுநிலை உதவி கல்வி பணிப்பாளர் சண்.தயாளன் ஆகியோரும்தெரிவுசெய்யப்பட்டனர். (5)

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபை ஓய்வூதியர் நலன்புரி சங்க பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் இ.மி.ச. மின் பாவனையாளர் சேவை நிலையம் சுன்னாகத்தில் நடைபெற்றது.

இதில் தலைவராக எஸ்.ஞானகணேசன், உப தலைவராக அ.நாகராஜா, செயலாளராக அன்ரன் ஞானப்பிரகாசம், உப செயலாளராக எஸ்.நடராஜா, பொருளாளராக தேவராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5)


# பயங்கரவாத சட்டத்தை ரத்துச் செய்யக்கோரி

## அச்சுவேலியில் கையெழுத்துவேட்டை



(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து போராட்டம் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று இரண்டாவது நாளாக அச்சுவேலி பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது. (5-6-18-33-104)



ஊரெழு மடத்துவாசல் சுந்தரபுரி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய தேர்த் திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படம்-ரவிசாந்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 250 | 300 | 240 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 600 | 500 | 500 | 450 |
| தக்காளி | 180 | 180 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 80 | 50 |
| கோவா | 200 | 170 | 200 | 200 |
| கரட் | 400 | 550 | 550 | 600 |
| பூசணி | 140 | 140 | 180 | 160 |
| புடோல் | 200 | 200 | 200 | 280 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 280 | 280 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 140 | 200 |
| பாகற்காய் | 250 | 250 | 250 | 350 |
| வெண்டிக்காய் | 200 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 400 | 350 | 400 | 300 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 240 |
| பீற்றூட் | 160 | 250 | 240 | 240 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 1000 | - | 1000 | 1200 |
| போஞ்சி | 280 | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 250 | 240 | 200 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 120 | 150 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | - | 220 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 100 | 120 | 150 | 200 |
| முள்ளங்கி | 140 | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | - | 60 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | 60 | - | - | 150 |


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடப்புத்தகங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும்

## பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ள அச்சுத்துறை

(கொழும்பு)

**டொலர் தட்டுப்பாடு காரணமாக காகிதங்களின் விலை அதிகரித்துள்ளதுடன் மை, டோனர்களுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்நிலை நீடித்தால் பாடப் புத்தகங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் என அச்சக உரிமையாளர்கள் தெரிவித்தனர்.**



மூலப்பொருட்களின் பற்றாக்குறை காரணமாக இலங்கையின் அச்சுத் தொழில் துறையானது செயற்பாடுகளைத் தொடர்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளது.

இந்நிலையில் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்ய தேவையான காகிதங்களை இறக்குமதி செய்ய அமெரிக்க டொலர்கள் தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் காகிதத்தின் விலை சுமார் 150 சதவீதம் உயர்ந்துள்ளதாக புத்தக வெளியீட்டாளர்கள் சங்கம் சமீபத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இறக்குமதி செய்யப்படும் 120,000 தொன் காகிதத்துடன் ஒப்பிடுகையில், இறக்குமதி செய்யப்படும் காகிதத்தின் வீதம் தற்போது படிப்படியாக குறைந்து வருகின்றது.

இலங்கை புத்தக வெளியீட்டாளர்கள் பள்ளி பயிற்சி புத்தகங்களுக்கான புத்தக வெளியீட்டு செயல்முறை 70 சதவீதம் குறைவடைந்துள்ளதாகவும் எச்சரித்துள்ளனர்.

எனவே அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு இப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்றும், இதே நிலை நீடித்தால், இரண்டாம் தவணைக்கு பாடசாலைகளை திறக்கும் போது, பாடப் புத்தகங்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர்கள் எச்சரித்துள்ளனர். (நி)

# மாதாந்தம் 2 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை எதிர்பார்க்கும் சுற்றுலாத்துறை அமைச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு மாதாந்தம் 2 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்ப்பதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் தனிநபர் அல்லது குடும்பமாக இலங்கைக்கு சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர்.

எனினும் தற்போது சுற்றுலா குழுவாக இலங்கைவர ஆரம்பித்துள்ளமையை அவதானிக்க முடிகிறது.

இந்த மாதத்தின் முதல் 15 நாட்களில் மாத்திரம் 50 ஆயிரத்து 326 பேர் சுற்றுலா பயணிகள் இலங்கை வந்துள்ளனர்.

இதன்படி இந்த ஆண்டு ஒரு இலட்சத்து 32 ஆயிரத்து 653 பேர் சுற்றுலாப் பயணிகளாக இலங்கை வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# பிரதமரின் செயலாளருக்கு கொரோனா தொற்று

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் டி.எம்.அநுர திஸாநாயக்கவுக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது என பிரதமர் அலுவலகம் நேற்று தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனைகளில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்று உறுதியானதை அடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இதனால், தன்னுடன் நெருங்கிப் பழகியவர்களை அவதானத்துடன் செயற்படுமாறு அவர் தெரிவித்துள்ளார். (நி)

# தாதியர்களின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு பணிப்பு

(கொழும்பு)

தாதியர்களின் அங்கீகரிக்கப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிதி நிலைமையை கருத்திற்கொண்டு, முழு அரச சேவையும் பாதிக்காதவாறு அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து கடந்த 9 நாட்களுக்கு முன்னர் தாதியர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

எனினும் அமைச்சரவையில் முன்மொழியப்பட்ட யோசனையை சுகாதார அமைச்சர் சமர்ப்பித்ததை அடுத்து பணிப்புறக்கணிப்பை இடை நிறுத்துவதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: 20 சூரி 7 செவ் 5 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: கப்பல் தளத்தில் வேலை
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12297

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம் 2
கி.பா: 79 சூரி 1 செவ் 8 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: MSc in Physiotherapy (லண்டன்)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/12298

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 2
கி.பா: 67 சூரி 10 செவ் 8 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: மெக்கானிக் (கனடா)
எதிர்பார்ப்பு: உயர்தரம் படித்த ஆங்கில அறிவுள்ள பெண்
தொ.இ: B/12299

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மகம் 3
கி.பா: 30 சூரி 10 செவ் 2 இல்
உயரம்: 5'4"
தகைமை/ தொழில்: O/L லண்டன்
எதிர்பார்ப்பு: உள்நாடு. வெளிநாடு இலங்கையில் பிறந்த பெண்
தொ.இ: B/12301

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 1
கி.பா: 18¾ சூரி 5 செவ் 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: TECHNICAL COLLEGE NVQ Level 4 network course HNDE dip வங்கியாளர் (தற்காலிகம்)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ:G/8596

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 46 சூரி 1 செவ் 6 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc Analyst தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: பட்டதாரி or அரச தொழில், தனியார் தொழில் வெளிநாடு எனின் சிங்கப்பூர், இந்தியா
தொ.இ:G/8701

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 4
கி.பா: சூரி 2 செவ் 8 இல் உயரம்: 164 cm
தகைமை/தொழில்: BSc/ அரசதொழில் (சுவீடன்)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ:G/8720

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 36½ சூரி, செவ் 5 இல்
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/8725

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# அமெரிக்காவின் புதிய தூதுவர் இலங்கைக்கு வருகை



(கொழும்பு)

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அமெரிக்காவின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள ஜூலி சுங் இந்த வார இறுதியில் இலங்கை வரவுள்ளார்.

அவர் தனது நற்சான்றிதழ்களை அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை அரசாங்கத்திடம் கையளிப்பார் என்று அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (நி)

# கர்ப்பிணி தாய்மார்களுக்கும் பூஸ்டர் டோஸ்

(கொழும்பு)

கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பூஸ்டர் டோஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மருத்துவர் பிரியங்கர ஜயவர்தன தெரிவித்தார்.

பூஸ்டர் தடுப்பூசியை பெறுவதன் ஊடாக கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பிறக்கவிருக்கும் குழந்தைக்கும் பாதுகாப்பு கிடைக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (நி)


**Mehndi Art**
*Classes*

தூரிகையின்
ஒரு மாதத்திற்குட்பட்ட குறுங்கால பயிற்சித் தொடர் – 2



மருதாணி அலங்காரம்
21 February
காலை10.30 மணிக்கு ஆரம்பமாகின்றது
பயிற்சிக்குரிய பொருட்கள் நிறுவனத்தால் தரப்படும்
பயிற்சிக்கட்டணம் ரூபா 2500 மட்டும்
பயிற்சி முடிவில் சான்றிதழ் தரப்படும்
விபரம் மற்றும் பதிவுகளுக்கு...
077 525 9954 / 077 914 3171
(C-3797)
தூரிகை- மத்திய கல்லூரி வீதி நெல்லியடி

**சேலை அணிதல் முறைகள்**

தூரிகையின் ஒரு மாதத்திற்குட்பட்ட குறுங்கால பயிற்சித் தொடர் –3

சேலை பிளீட்செய்தல் மற்றும் சேலை அணிதலுக்கான பயிற்சி வகுப்புக்கள்



பெப்பிரவரி 25
வெள்ளி 10.00 AM ஆரம்பம்
பயிற்சிக் கட்டணம் ரூபா 2000 மட்டுமே
முன்பதிவு மற்றும் விபரங்களிற்கு: 0775259954
தூரிகை –மத்திய கல்லூரி வீதி நெல்லியடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளவில் கொரோனா பாதிப்பு 19 சதவீதம் சரிவு

## உலக சுகாதார அமைப்பு தகவல்

(ஜெனிவா)

**உலகளவில் கொரோனா பாதிப்பு 19 சதவீதம் சரிவு அடைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

உலகளவில் கடந்த செவ்வாய்க்கிழமையுடன் முடிந்த ஒருவார காலத்துக்கான கொரோனா நிலைவர அறிக்கையை உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில், கடந்த வாரத்தில் உகைமெங்கும் ஒரு கோடியே 60 இலட்சம் பேருக்கு கொரோனா தொற்று பாதிப்பு ஏற்பட்டது. 75 ஆயிரம் பேர் தொற்றுக்கு பலியாகி உள்ளனர்.

இந்த எண்ணிக்கை மூலம் உலகளவில் ஒரு வார கால தொற்று பாதிப்பு 19 சதவீதம் வீழ்ச்சியை சந்தித்துள்ளது. இறப்புகள் நிலையாக உள்ளன.

அவுஸ்திரேலியா, கம்போடியா, சீனா, பிஜி, பிலிப்பைன்ஸ், ஹொங்காங், தென்கொரியா உள்ளிட்ட 37 நாடுகளைக் கொண்ட மேற்கு பசிபிக் பிராந்தியத்தில் தொற்று பாதிப்பு 19 சதவீதம் அதிகரித்துள்ளது.

மேலும் தென்கிழக்கு ஆசியாவில் 37 சதவீதம் சரிவு அடைந்துள்ளது. உலகளவில் இது மிகப்பெரும் சரிவு ஆகும். மத்திய கிழக்கு நாடுகளில் கொரோனா இறப்பு 38 சதவீதம் அதிகரித்துள்ளது.

புதிய பாதிப்புகள் அதிகளவில் ரஷ்யாவில் ஏற்பட்டுள்ளது. கிழக்கு ஐரோப்பாவில் பாதிப்புகள் சமீப வாரங்களில் இருமடங்காக அதிகரித்துள்ளன. இது ஒமிக்ரோன் வைரசால் ஏற்பட்ட பாதிப்பாகும்.

ஆல்பா, பீட்டா, டெல்டா உள்ளிட்ட உருமாறிய கொரோனா வைரஸ் தாக்கம் தொடர்ந்து வீழ்ந்துள்ளது.

ஒமிக்ரோன் தொற்று அவற்றை வெளியேற்றி உள்ளது என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# பிரேசிலில் பெரு வெள்ளம் சுமார் 94 பேர் உயிரிழப்பு



(ரியோடி ஜெனிரே)

பிரேசில் - பெட்ரோ போலிஸ் நகரில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளத்தில் சிக்கி சுமார் 94 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரியோடி ஜெனிரோவின் வடக்கே மலைப்பகுதியில் அமைந்துள்ள பெட்ரோபோலிஸ் நகரம் தொடர் மழையால் பாதிக்கப்பட்டது.

இப்பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவால் மலைப்பகுதிகளில் உள்ள பல வீடுகள் அழிக்கப்பட்டன. அத்துடன், பெரும் வெள்ளத்தால் கார்கள் உள்ளிட்ட பெருமளவு வாகனங்கள் அழித்துச் செல்லப்பட்டன.

பேரழிவுகளைத் தொடர்ந்து பெட்ரோபோலிஸ் நகரில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நகருக்கு மீட்புக் குழுக்கள் விரைந்து நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி உயிருக்குப் போராடி வருவோரை மீட்கும் பணிகளை முன்னெடுத்துள்ளன.

தேடுதல் மற்றும் மீட்புக் குழுக்களால் இதுவரை 24 பேர் உயிருடன் மீட்கபட்டுள்ளனர்.

94 மரணங்கள் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன என பிரேசிலிய அரசு உறுதி செய்துள்ளது. (நி)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் கடைகள் வாடகைக்கு வழங்குதல் -2022

மானிப்பாய் சந்தை கடைத் தொகுதியின் 10 மேற்தள கடைகள் கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரே முறையில் செலுத்தக் கூடிய ஒருங்கிணைக்கப்பட்ட தொகைக்கான கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட நிபந்தனைக்கமைய வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலப்பகுதி : 2022.02.21 முதல் 2022.03.10 வரை அலுவலக நாட்களில்
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 2022.03.11 பி.ப. 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2022.03.11 பி.ப. 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம்

நிபந்தனைகள்:-

1) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2) கேள்விப்பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளிக்க வேண்டும். அத்துடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்டு, பிரதேச செயலரால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3) கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய 2ஐயும் பூரணப்படுத்தி கடித உறையிலிட்டு "தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி எனக்குறிப்பிட்டு 2022.03.11 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும். அதன் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
4) மாதாந்தக்கடை வாடகையாக பிரதேச சபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் தொகையை செலுத்த வேண்டும் என்பதுடன் குறித்த மாத வாடகைப் பணத்தை ஒவ்வொரு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்வரும் வேலை நாளில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற வேண்டும். தவறுமிடத்து அதற்கான மாதக்கட்டணத்துடன் மாத வாடகைக்குரிய தண்டப்பணம் 10%மேலதிகமாக அறவிடப்படும்.
5) கேள்விச்சித்திகாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையை பிரதேச சபையால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
6) சித்திகர குத்தகைக்காரர் வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.
7) சித்திகர குத்தகைக்காரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்த வேண்டும்.
8) சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.
9) கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கு உண்டு.
10) மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகளுக்கு 021 225 5381 / 021 225 6646.

| இல | சந்தைக கடை இல | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | 1U | 1,000.00 | 6000.00 | 600,000.00 | 2000.00 |
| 02 | 2U | 1,000.00 | 6000.00 | 600,000.00 | 2000.00 |
| 03 | 3U | 1,000.00 | 6000.00 | 600,000.00 | 2000.00 |
| 04 | 4U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 05 | 5U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 06 | 6U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 07 | 7U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 08 | 8U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 09 | 9U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |
| 10 | 10U | 1,000.00 | 6750.00 | 675,000.00 | 2250.00 |

மீள் கேள்வி அறிவித்தல்

| இல | சந்தைக் கடையின் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | கேள்விவைப்புப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித்தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | மானிப்பாய்புளியடிச் சந்தைக்கடை | 1,000.00 | 3600.00 | 360,000.00 | 1200.00 |

அ.ஜெபநேசன், தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(C-3799)


# படைகள் வாபஸ்; ரஷ்யா கூறுவது பொய்

## வெள்ளை மாளிகை தகவல்

(வோஷிங்டன்)

உக்ரைனுடனான எல்லையில் இருந்து துருப்புக்களை நகர்த்துவதாக ரஷ்யா வெளியிட்ட கருத்து தவறானது என சிரேஷ்ட அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சமீபத்திய நாட்களில் எல்லையில் மேலதிகமாக 7,000 துருப்புக்கள் களமிறக்கப்பட்டுள்ளதாகவும் ஏதேனும் ஒரு சாக்குப் போக்கை கூறி உக்ரைனை எந்த நேரத்திலும் ஆக்கிரமிக்க ரஷ்யா தயாராக உள்ளது எனவும் சர்வசே ஊடகங்களிடம் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இராணுவப் பயிற்சிகள் நிறைவடைந்ததையடுத்து உக்ரைன் எல்லையில் இருந்து தனது படைகளை முந்தைய தளங்களுக்கு நகர்த்துவதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு நேற்று முன்தினம் தெரிவித்தது.

உக்ரைனிடமிருந்து 2014 இல் ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்ட கிரிமியாவில் இருந்து யுத்த டாங்கிகள் வெளியேறுவதைக் காட்டும் வீடியோவை நேற்று முன்தினம் புதன்கிழமை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டது. என ரஷ்யா தனது படைகளை நகர்த்துவதற் கான எந்த ஆதாரமும் இல்லை என மேற்குலக நாடுகள் தெரிவித்து வருகின்றன. சமீபத்திய நாட்களில் ஆயிரக்கணக்கான மேலதிக துருப்புக்கள் உக்ரைன் எல்லைக்கு வந்துள்ளன. நேற்று முன்தினம் புதன் கிழமையும் மேலதிக துருப்புக்கள் வந்துள்ளனஎனவெள்ளைமாளிகை சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார். இதேவேளை, உக்ரைன் எல்லையில் இருந்து ரஷ்ய துருப்புக்கள் திரும்பிப்புவதாக வெளியான அறிவிப்பை மட்டுமே நாங்கள் கேள்வியுற்றோம். ஆனால் அதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் இல்லை என உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு முயற்சி குறித்த குற்றச்சாட்டுக்களை புடின் தொடர்ந்து மறுத்து வந்ததோடு, ஐரோப்பாவில் இன்னொரு போரை ரஷ்யா விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார். எனினும் நவம்பர் முதல் பதற்றம் அதிகரித்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்தில் அதிகரிக்கும் தொற்று

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் கொவிட் தொற்று அதிகரிப்பதால் பூஸ்டர் தடுப்பூசியை தவறாது பெற்றுக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட பிராந்திய சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் இம் மாதம் 377 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இவ் வருடம் 2022 ஆம் ஆண்டு தற்போது வரை மன்னார் மாவட்டத்தில் 578 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை 12 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இம் மாதம் நேற்று முன்தினம் வரையான 16 நாட்கள் வரை 377 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் மொத்தமாக 578 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கொரோனா தொற்றால் இம் மாதம் 3 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

எனவே பொதுமக்கள் தமது 2 ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொண்ட பின்னர் மூன்று மாதங்கள் நிறைவடைந்து இருந்தால் கட்டாயமாக 3 ஆவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ள வேண்டும். ஏனைய சுகாதார வழிமுறைகளையும் கடைபிடிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.



பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. இதுவரை மொத்தமாக 12,643 மாணவர்களுக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதுடன் 2 ஆம் கட்ட தடுப்பூசிவழங்கலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்ட மக்களின் சதவீதம் மன்னார் மாவட்டத்தில் 39 சதவீதமாக காணப்படுவதாகவும் தெரிவித்தார். (5-285)

## நிதி ஒதுக்கி 2 வருடங்கள் கடந்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை

### பிரதேச சபை உறுப்பினர் குற்றச்சாட்டு

(அக்கராயன்)

கிளிநொச்சி பெரிய பரந்தன் மயான எரி கொட்டகை அமைத்தல் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவில்லை என கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் இ.இளங்கோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

பெரிய பரந்தன் வட்டாரம் செருக்கன் ஆறாம் கட்டை மயான எரி கொட்டகை அமைத்தல் தொடர்பாக 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட்ட வேலைத்திட்டம் இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் இன்று வரையில் நடைபெறவில்லை.

பிரதேச சபையின் தொட்டில் தொடக்கம் சுடுகாடு வரையான வேலைத் திட்டம் எனக் கூறும் சபை குறித்து ஒதுக்கப்பட்ட பாதீட்டு நிதியினை கொண்டு இரண்டு வருடங்களாக எரி கொட்டகையை அமைக்காமல் இருப்பது வேதனைக்குரியது எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.(5-6-350)

## நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் விழா எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பொங்கல் உற்சவத்தின் முன்னாயத்தக்கூட்டம் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருலிங்கநாதன் (காணி) தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நாகதம்பிரான் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கண்டாவளை பிரதேச செயலாளர் ரீ. பிருந்தாகரன், கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி (பதில்) பிரியநந்தினி கமலசிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நாட்டில் தற்போது நடைமுறையிலுள்ள சுகாதார முறைகளைப் பின்பற்றி இம்முறை பொங்கல் உற்சவத்தினை நடத்துவதற்கு தீர்மானித்தனர். (5-6-315)

## ஊடகவியலாளர் டடிவனியாவை விடுதலை செய்யக்கோரி கவனயீர்ப்பு



(முறிகண்டி)

ஊடகவியலாளரும் கவிஞரும், விளையாட்டு வீராங்கனையுமான டடிவனியாவை விடுதலை செய்யுமாறு தெரிவித்து மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டதன் பின்னர் மகஜரை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறிமோகனிடம் குடும்பத்தார் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து மகஜரைக் கையளித்தனர்.

கடந்த வருடம் மார்ச் மாதம் 29 ஆம் திகதி டடிவனியா மற்றும் அவரது அலுவலகத்தில் பணியாற்றிய மற்றுமொரு சந்தேக நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5-100)

## கட்டுத்துவக்கில் சிக்கி ஒருவர் காயம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் கொம்பு வைத்த குளம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை கட்டுத்துவக்கு வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்து போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல் கொம்பு வைத்த குளம் பகுதியில் வயலுக்குச் சென்று திரும்பிய குடும்பஸ்தர் ஒருவர் கட்டுத் துவக்கில் சிக்கி காலில் காயமடைந்த நிலையில் மல்லாவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டதுடன் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பில் மாங்குளம் நட்டாங்கண்டல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-6-315)

## வெட்டி அகற்றப்படும் பழைமை வாய்ந்த மரங்கள்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள பழைமை வாய்ந்த மரங்கள் மின்சார இணைப்புகளுக்காக அகற்றப்பட்டுள்ளமை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனை வளாகத்தில் புதிய மின் இணைப்புக்களை வழங்கும் பொருட்டு இணைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் மருத்துவமனை வளாகத்தில் காணப்பட்ட மிகவும் பழைமை வாய்ந்த பல மரங்கள் வெட்டியகற்றப்பட்டுள்ளன.

பழைமை வாய்ந்த இம் மரங்களை அகற்றுவது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளனர். (5-315)

## கஞ்சா வைத்திருந்த இருவருக்கு 13 ஆயிரம் அபராதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி முழங்காவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் 920 மில்லி கிராம் மற்றும் 760 மில்லி கிராம் கஞ்சா உடைமையில் வைத்திருந்த இரண்டு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்த பொலிஸார் குறித்த இருவரையும் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவன் நீதிமன்றில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த இருவருக்கும் தலா 6500 அபராதம் விதிக்கப்பட்டது. (5-6-315)



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தமக்கான சம்பள அதிகரிப்பு மற்றும் நிரந்தர நியமனம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை உள்ளடங்கியதான கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நேற்று முன்னெடுத்தனர். (படம்:-யதுபாஸ்கரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2022-14.03.2022

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற்படும்



**இல்லம் வருவோரை இனிதே உபசரிக்கும் தனுசு இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்களுடைய இராசிநாதன் குரு பகவான், பாக்கிய ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் இராசியிலேயே விரயாதிபதி செவ்வாயும், லாபாதிபதி சுக்கிரனும் இருக்கிறார்கள்.

### ராகு-கேது ஆதிக்கம்

உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் ராகுவும், 12 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் 6 ஆம் இடத்தில் ராகு சஞ்சரிப்பதால் மறைமுக எதிர்ப்புகள் இருக்கத்தான் செய்யும். இருந்தாலும் அவற்றால் பாதிப்புகள் ஏற்படாது. ஏழரைச் சனியில் பாதச் சனியின் ஆதிக்கம் நடப்பதால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படலாம். கொடுக்கல்-வாங்கல்களில் திருப்தி ஏற்படும். விரய கேதுவின் ஆதிக்கத்தால் சுப விரயங்கள் ஏற்படும்.

### மகர-சுக்கிரன் சஞ்சாரம்

மாசி மாதம் 14 ஆம் திகதி, மகர இராசிக்குச் சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், தன ஸ்தானத்திற்கு இப்பொழுது வருவதால் பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். ஸ்தம்பித்து நின்ற தொழில் தானாக நடைபெறும். பெண் வழிப் பிரச்சினைகள் அகலும். புதிய வேலைக்கு விண்ணப்பித்திருந்தால் அது கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். தேங்கி இருந்த சரக்குகள் விற்பனையாகும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புகளில் மாற்றம் ஏற்படும்.

### உச்ச செவ்வாய் சஞ்சாரம்

மாசி மாதம் 14 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்லும் செவ்வாய், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு பஞ்சம விரயாதிபதியான செவ்வாய் வலிமையடைவதால், இக்காலத்தில் விரயங்கள் கூடும். வீடு வாங்குவது, இடம் வாங்குவது, கட்டிய வீட்டைப் பழுது பார்ப்பது போன்ற வற்றில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது. மேலும் பிள்ளைகளின் கல்யாணம் போன்ற சுப நிகழ்வுகள் நடைபெறும். வேலைவாய்ப்பு கிடைக்காத பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.




### கும்ப - புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மாதத் தொடக்கத்தில் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மாசி 17 ஆம் திகதி சகாய ஸ்தானத்திற்கு வந்து அங்குள்ள சூரியன், குரு ஆகியவற்றோடு இணைந்து சஞ்சரிக்கப் போகிறார். உத்தியோகத்தில் உள்ளவர்கள் 'விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு தொழில் தொடங்கலாமா? அல்லது வேலையில் இருந்தபடியே தொழிலைத் தொடங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து, உதிரி வருமானம் வந்துசேரும். சூரியனோடு புதன் இணைந்து 'புத ஆதித்ய யோக'த்தை உருவாக்குவதால், கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். இம்மாதம் இராமபிரான் வழிபாடு நன்மைகளை வழங்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் வேலைவாய்ப்பு கருதியும், இடமாற்றம் கருதியும் நீங்கள் ஏதேனும் முயற்சி செய்திருந்தால் அது கைகூடும். உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். பணிபுரியும் பெண்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். சம்பள உயர்வு பற்றிய சந்தோசமான தகவல் வரலாம்.

## எதிர்காலத்தைப் பற்றிய பயம் அதிகரிக்கும்



**தங்களை பெருமையாக பேச வேண்டுமென்று நினைக்கும் மகர இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது.

### ராகு-கேது ஆதிக்கம்

உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் ராகுவும், 11 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் எதிர்காலத்தைப் பற்றிய பயம் அதிகரிக்கும். மனக் குழப்பங்கள் ஏற்பட்டு கவலையை உருவாக்கும். 'யாரையும் நம்பி எதையும் செய்ய முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். முன்னோர் சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் தாமதம் ஏற்படும். சகோதர ஒற்றுமை குறையலாம். குடும்பத்தில் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கும். கேதுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் ஆரோக்கியத் தொல்லைகளும் உண்டு.

### மகர-சுக்கிரன் சஞ்சாரம்

மாசி மாதம் 14 ஆம் திகதி மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அதாவது உங்கள் இராசிக்கு சுக்கிரன் வரும் இந்த நேரம் உன்னதமான காலமாகும். 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சுக்கிரன் விளங்குவதால் தொழிலில் படிப்படியாக முன்னேற்றம் வந்து சேரும். 'பழைய தொழிலை மாற்றி புதிய தொழிலைத் தொடங்கலாமா?' என்று சிந்திப்பீர்கள். அதிக சம்பளம் தருவதாகச் சொல்லி அழைப்புகள் வரலாம். [illegible] யின் ஆதிக்[illegible] யோசித்து ஏற்றுக் கொள்ளுங்கள். கூட்டாளிகளால் அமைதி குறையலாம்.

### உச்ச செவ்வாய் சஞ்சாரம்

மாசி 14 ஆம் திகதி, உங்கள் இராசியில் செவ்வாய் அடியெடுத்து வைக்கிறார். அது அவருக்கு உச்ச வீடு. லாபாதிபதி உச்சம் பெறும் இந்த நேரம் சரிந்து கிடக்கும் பொருளாதாரம் சகஜ நிலைக்கு வரும். ஆயினும் இங்குள்ள சனியோடு செவ் வாய் இணைவது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கலாம். குறிப்பாக எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட வகையில் ஏதேனும் தொல்லை [illegible]ம். வாகனங்களில் [illegible] பொழுது கவனம் தேவை.




### கும்ப-புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் மாசி 17 ஆம் திகதி தன ஸ்தானத்திற்கு வரப்போகிறார். இக்காலத்தில் இனிய சம்பவங்கள் பலவும் நடைபெறும். பிள்ளைகளின் வேலைவாய்ப்புக் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். கடன் சுமை இப்பொழுது குறையும். இல்லத்தில் மங்கல ஓசை கேட்க வழிபிறக்கும். தந்தை வழியில் இருந்த விரிசல்கள் அகலும். தனவரவு திருப்தி தரும். எதிரிகளின் தொல்லை குறையும். ஏற்ற இறக்கமான பொருளாதாரத்தை சரிசெய்ய எடுத்த முயற்சி கைகூடும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் சனீஸ்வர பகவானை வழிபடுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். விரயங்கள் அதிகரிக்கும். வீடுமாற்றங்கள் திருப்தி தராது. கணவன் - மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு செயற்படுவதன் மூலமே அமைதி கிடைக்கும். குடும்பத் தகவல்களை யாரிடமும் விமர்சிக்க வேண்டாம். பிள்ளைகளுக்கு எதிர்பார்த்தபடி வேலை கிடைக்கும். பணிபுரியும் பெண்கள் கடுமையாக உழைக்க வேண்டிய சூழல் உருவாகும். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை நடத்த தயார்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு


(கொழும்பு)

**கொவிட் சுகாதார வழிகாட்டுதலின் கீழ் எந்த நேரத்திலும் தேர்தலை நடத்துவதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தயாராக இருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**

இந்த மாதம் 23 ஆம் திகதி நாட்டில் செயற்படும் அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடனான கலந்துரையாடல் ஒன்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இக்கூட்டத்தில் தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பான சீர்திருத்தங்களை அடையாளம் காணும் வகையில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் விசேட பாராளுமன்ற குழுவிற்கு முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அரசியல் கட்சிகளின் ஆதரவு கோரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், மாகாண சபை. மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ( நி)



# அரசியல் கட்சிகளுக்குள் பிளவு

## புதிய கூட்டணிகள் உருவாகும் சாத்தியம்

(கொழும்பு)

நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளுக்குள் பிளவு ஏற்பட்டுள்ள நிலையில், புதிய கூட்டணிகள் உருவாகும் சாத்தியம் காணப்படுவதாக அரசியல் வட்டாரத் தகவல்களை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கத்திற்குள் பிளவு நிலை உக்கிரமடைந்துள்ளதாகவும், எதிர்வரும் மார்ச் மாதம் புதிய கூட்டணி குறித்த அறிவிப்பு வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மாநாட்டில் கூட்டணிக் கட்சிகள் பங்குபற்றவில்லை.

இதன்மூலம் ஆளும் கட்சிக்குள் நிலவி வரும் பிளவு நிலை வெளிப்பட்டுள்ளது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# பேருந்துடன் மோதி தடம்புரண்ட பாரவூர்தி



(கண்டி)

கண்டி - மாத்தளை வீதியில் அலவத்துகொடை, பலகடுவ பிரதேசத்தில் பாரவூர்தி ஒன்று தரம்புரண்டு விபத்துக்குள்ளாகி உள்ளது.

இவ்விபத்து நேற்று அதிகாலை இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த பழைய பேருந்து ஒன்றில் மோதியே குறித்த பாரவூர்தி தடம்புரண்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அலவத்துகொடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி)

# டொலரின் பெறுமதி 300 ரூ.வரை உயரலாம்

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. டொலர் பற்றாக்குறை இன்னும் நீங்கவில்லை. ரூபாவின் பெறுமதி கடுமையாக வீழ்ச்சியடைந் துள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், டொலர் ஒன்று 250 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. இத்தொகை 275 ரூபாவரை உயரக்கூடும். அத்தோடு நிறுத்தவில்லையென்றால் வருட இறுதிக்குள் 300 ரூபாவரை டொலரின் பெறுமதி அதிகரிக்கக் கூடும் என அவர் குறிப்பிட்டார். (நி)

# இன்று ஒரு தகவல்

## இருக்கிறது என்பதற்காக... கிடைக்கிறது என்பதற்காக..

வட நாட்டுக்கு மாற்றலாகியிருந்த என் நண்பன் ஒருவனைச் சந்திக்க நேர்ந்தபோது, அவன் மிகத் தவறான பழக்கம் ஒன்றிற்கு அடிமையாகியிருந்தது தெரியவந்தது. நான் எச்சரித்தபோது, தானாக வருகிறது – நான் தேடிப்போகவில்லை – இங்கு யாருக்குத் தெரியப் போகிறது? என்றான்.

பலவீனமான குரலில் என்னைப் பேசவைக்கும் வகையில் அடித்துப் பேசினான்.

இருக்கிறது என்பதற்காகச் செய்யக் கூடாது, கிடைக்கிறது என்பதற்காக அனுபவிக்கக்கூடாது என்பவற்றை மட்டும் அழுத்திச் சொன்னேன்.

அவன் ஏகப்பட்ட சிக்கலில் சிக்கியிருப்பதாக இப்போது கடிதம் எழுதியிருக்கிறான்.

என் வார்த்தைகள் உண்மையாகி விட்டதில் எனக்கு மகிழ்ச்சி ஆனால் நண்பன் பலிக்கடாவாக ஆனதில் வருத்தம்.

பசியில்லாதபோது அள்ளிக் கொட்டிக் கொள்கிறோமா? நீந்தத் தெரியாமல் ஆழத்திற்குப் போகிறோமா? இல்லை. ஆனால் மற்ற விடயங்களில் மட்டும் ஏன் தவறு செய்ய நேரிடுகிறது?

சுற்றும் முற்றும் தவறான பாதைகள் மேளதாள வெற்றிலைப் பாக்குடன் நம்மை வரவேற்க, அவற்றைத் துச்சமென மதித்து, அலைபாயும் உள்ளத்திலிருந்து விடுபட்டு வாழ்வதில் கிடைக்கும் மகிழ்ச்சி இருக்கிறதே. அதை விட மகிழ்ச்சிக்குரிய விடயம் வேறு இருக்கவே முடியாது.

யாருமே காணப்போவதில்லை என்று, தவறான பழக்கங்களையோ முறைகேடான உறவுகளையோ மேற்கொள்வதைக் காட்டிலும் தவறான முடிவு வேறு இல்லை.

காரணம்.

அந்த ஒரு நிகழ்ச்சி உலகின் கண்களுக்கு மறைக்கப்படலாம். ஆனால் உள் மனம் நீதிபதியாகித் தினந்தோறும் தண்டனையை வழங்கும்.

ருசிகண்ட பூனையாகி, தொடர்ந்து அப்பழக்கத்திற்கு அடிமையாகி, ஊரார் சிரிக்கும் நிலை ஒருநாள் உருவாகாமல் போகாது.

ஆக, இருக்கிறது – கிடைக்கிறது – என்ற நிலையை விட்டு விட்டு,

அவற்றின் விளைவுகளை எண்ணிப் பார்த்துச் செயற்படுவதே புத்திசாலித்தனமானது.

நம்முடைய ஒவ்வொரு செயலிலும் தர்க்கம் இருக்க வேண்டும். நமக்கு மட்டுமின்றி மற்றவர்களுக்கும் அச்செயல் நியாயமாகப்பட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக – அது சட்ட ரீதியானதாகவும் இருக்க வேண்டும்.

இப்படிச் செயற்பட முடியுமானால் நமக்கு எந்தக் காலத்திலும் தலைக்குனிவு என்பது ஏற்படாது. யாராலும் நம்மை அவமானப்படுத்த முடியாது.துன்பங்களும் நம்மைத் தொடரா!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஆமையும் நாயும்



ஒரு காலத்தில் தென் மேற்கு நைஜீரியாவில் குருமி என்ற இடத்தில் மோசமாகப் பஞ்சம் ஏற்பட்டது. மிகவும் குறைவான உணவு தான் கிடைத்துக் கொண்டிருந்ததால் அங்கிருந்த எல்லோரும் மெலிந்து போய் ஆரோக்கியமில்லாதவர்களாகத் தோன்றினர்.

ஆமைக்கு தன் நண்பனான நாய் மட்டும் எப்படி கொழுகொழு என்று இருக்கிறான்? என்று சந்தேகம் வந்தது. அதற்குப் பின்னால் இருக்கும் ரகசியம் என்னவாக இருக்கும் என சிந்தித்துப் பார்த்த ஆமை நாயிடமே கேட்கச் சென்றது.

நாயும் ஆமையும் பேசிக் கொண்டவை...

**ஆமை:** என் இனிய நண்பனே, நாம் இருவரும் எவ்வளவு காலமாக நண்பர்களாக இருக்கிறோம். உன்னுடைய கன்னம் சிவந்து உப்பி இருக்கிறது. வயிறு நன்றாகப் புடைத்திருக்கிறது. அதன் ரகசியம் என்னவென்று சொல்லி விட்டால், நான் என்னுடைய உயிரைக் காப் பாற்றிக் கொள்வேன்.

**நாய்:** அதில் எந்த ரகசியமும் இல்லை நண்பா, கடுமையாக உழைத்து அமைதியாக வாழ்ந்தால் போதும்.

**ஆமை:** நண்பா, நான் இப்படியே சோர்ந்து போய் இருப்பதை நீ விரும்புகிறாயா? இந்தப் பஞ்சத்திலும் நீ எப்படி உணவு தேடிக் கொள்கிறாய் என்று எனக்குத் தெரியும். தயவு செய்து அதை எனக்குச் சொல். நான் ரகசியமாக வைத்துக் கொள்வேன்.

**நாய்:** என் ஆமை நண்பா, நான் ரகசியமாக எதுவும் இல்லை என்று சொல்லி விட்டேன். நான் பொய் சொல்கிறேன் என்று சொல்கிறாயா?

நாயின் பதில்கள் ஆமைக்குத் திருப்தியாக இல்லை. நாய்க்கு எப்படியோ நிறைய உணவு கிடைக்கும் இடம் தெரிந்திருக்கிறது என்று உறுதியாக எண்ணியது.

எனவே மறுநாள் முதல் ஆமை நாயைப் பின் தொடர்ந்து சென்று ரகசியத்தைக் கண்டு பிடித்துவிட முடிவு பண்ணியது.

அதிகாலையில் ஒரு கூடையுடன் நாய் யாருக்கும் தெரியாமல் வெளியே போவதைப் பார்த்தது. நாயின் வால் அசைவதைப் பார்த்துக் கொண்டே அதன் பின்னாலேயே போனது ஆமை. நாய் கண்ணில் படும் தூரத்தில் கொஞ்சம் தள்ளியே வந்து கொண்டிருந்தது.


பக்கத்துக் கிராமத்தில் இருந்த வயலுக்குப் போனது. சுற்றிச் சுற்றிப் பார்த்து விட்டு யாராவது தன்னைப் பார்க்கிறார்களா? என்று கவனித்தது.

அதிகாலை வேளை என்பதால் வேறு யாரும் அங்கில்லை. உடனே வயலுக்குள் நுழைந்து கிழங்குகளை பிடிங்கிப் பிடிங்கி கூடையில் போட்டுக் கொண்டது.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்



"அரக்கர் தலைவர் இருவரும் களம் விட்டு மறையவே, மற்றவர் எதிர்த்துப் பயனில்லை" என்பதால் உயிர்மேல் விருப்புக் கொண்டு அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடித்தனர். செத்தவர் சிலர் சிதைந்தவர் பலர் ஆயினர்.

அரக்கர்களின் கூட்டு எதிர்ப்பு வரட்டுக் கூச்சலாய் எழுந்து, ஓங்கி, அடங்கி விட்டது. விசுவாமித்திரர் தம் யாக வேள்வியை இனிது முடித்து மன நிறைவு கண்டார். மற்றைய முனிவர்களும் பனிப்படலம் நீங்கியது போல மன ஆறுதல் பெற்றுத் தத்தம் வேள்விப் பணிகளைச் செய்து முடித்தனர். அரக்கர்களின் அரட்டலும் மருட்டலும் அதோடு முடிந்தன. இராமன் விசுவாமித்திரருக்குத் துணையாய் இருந்து அவர் இட்ட பணிகளை இனிது முடித்துத் தந்து, அவர்தம் நன்மதிப்பைப் பெற்றான்.

**மிதிலை ஏகல்**

கடமையை முடித்துக் கவலை நீங்கி இருந்தனர். 'அடுத்துச் செய்யத்தக்கது யாது?' என்று முனிவன் கட்டளையை எதிர் நோக்கி நின்றனர்.

"அடுத்த பயணம் எங்கே" என்று இராமன் நயனம் வினவியது. "ஜனகன் என்ற பெயருடைய மாமன்னன் ஒரு பெரு வேள்வி நடத்த இருக்கிறான்; வேள்வி காண அவன் ஊராகிய மிதிலைக்குச் செல்கிறோம். அங்கு உனக்கு ஒரு வீர விளையாட்டுக் காத்துக் கிடக்கிறது".

"மேரு போன்ற வில் ஒன்று வளைப்பார் அற்று வாளாக் கிடக்கிறது; அதனை எடுத்து, வளைத்து, நாண் ஏற்றி, உன் வீரத்தைக் காட்டு; நீ மாவீரன் என்பதற்கு அஃது ஓர் எடுத்துக் காட்டு; அதனை வெளிப்படுத்த இவ்வாய்ப்புகள் காத்துக் கிடக்கின்றன" என்று கூறினார்.

எடுத்த கருமம் முடித்துக் கொடுத்தமையின் அவனைச் "சான்றோன்" என்று உலகம் புகழ்ந்தது. முனிவர்கள் அவன் ஆற்றிய பணியையும், அதனால், தாம் அடைந்த பயனையும் சொல்லிப் பாராட்டி நன்றி நவின்றனர். "இவனை மாவீரன் என்று கேட்கும் தசரதன் உவகை உறுவது உறுதி" என்றனர்.

அங்கே அந்த வனத்தில் வாழும் முனிவர் வாயிலாய் அவன் முன்னோர்களின் வரலாறுகளைக் கேட்டு மகிழ்வும் பெருமையும் கொண்டனர். முந்தையோர் வீரச் செயல்களைக் கேட்கும் தோறும் அவர்கள் நெஞ்சம் இறும்பூது எய்தியது. தேன் மழையில் தாம் நனைவது போல அக்கதைகள் அவர்களுக்கு இனித்தன. தாய் பாடும் தாலாட்டுப் போல அவர்கள் நெஞ்சில் பதிந்தன; அவர்களுக்கு ஊக்கம் அளித்தன.

**பகீரதன் கதை**

விசுவாமித்திரர்பால் கேட்ட கதைகளுள் பகீரதன் கதையும் ஒன்றாகும். "கங்கை நதிக்குப் பாகீரதி என்ற பெயர் வரக் காரணம் யாது" என்று முனிவரைக் கேட்டு அறிந்தனர்.

பகீரதனின் முயற்சியால் வான் உலகில் பாய்ந்து கிடந்த நதியை மண்ணுக்குக் கொண்டு வந்தமையால் அதற்குப் பாகீரதி' என்ற பெயர் உண்டாயிற்று என்று விளக்கம் தந்தார்.

"மலையரசனாகிய பருவதராசனுக்கு இரண்டு புதல்வியர் இருந்தனர்; இவர்களின் தாய் பெயர் "மனோரமை". மூத்தவள் 'கங்கை; இளையவள் 'பார்வதி' சிவனார் பார்வதியை இடப்பக்கத்தில் வைத்துச் சரிபாதி இடம் கொடுத்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணாடியில் பிரதிபலிக்கும் ஒளி சுவரில் நகருகிறது. ஆனால் சுவரோ முட்டாள்தனமாக தானே நகர்வதாக நினைக்கிறது. நம் விஷயமும் அவ்வாறே. – விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விட்டுவிடப் போகுதுயிர் விட்டவுடனே உடலை...

பட்டினத்தடிகள் மிகப்பெரும் ஞானத் துறவி. உலகப் பற்றுப் பாசங்களையெல்லாம் துறந்து சிவத்துவ வடிவத்தை முத்திப் பேறாகப் பெற்றவர்.

அவர் அருளிய உடற்கூற்றுவண்ணம் என்ற திருப்பாடல் ஜனனத்தையும் மரணத்தையும் உள்ளடக்கிய மனித வாழ்வை அப்படியே பட்டியல்படுத்தும்.

இவ்வாறு உலகப் பற்றுக்களைத் துறந்த பட்டினத்தடிகள் தாய்ப்பாசத்தை – தாய் மீது கொண்ட அன்பைத் துறக்கவில்லை. அவ்வாறு தாய் மீது கொண்ட பாசத்தைத் துறக்காத காரணத்தாலேயே பட்டினத்தடிகள் மிகப்பெரும் ஞானத் துறவி எனப் போற்றப்படுகிறார்.

ஆம், துறத்தல் என்பதன் பொருளைப் பலரும் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

உண்மையான துறவு என்பது; தந்தை தாயைப் பேணிப் பாதுகாத்து அவர்களுக்குரிய கடமைகளைச் செய்வதையும் உள்ளடக்கியதாகும்.

ஆக, இல்வாழ்வானும் துறவறத்தானும் செய்ய வேண்டிய கடமை ஒன்றுண்டெனில், அஃது பெற்று வளர்த்தவர்களுக்கான கடமையைச் செவ்வனே செய்தலாம்.

இவை ஒருபுறமிருக்க, மரணத்தின் பின்னரான பி.சி.ஆர் பரிசோதனை கட்டாயமில்லை எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது ஒருவர் இறந்துவிட்டாரெனில், அவர் மீது பி.சி.ஆர் பரிசோதனை செய்து அவருக்கு கொரோனாத் தொற்று உண்டா? இல்லையா? என்பது பற்றிய முடிவு தேவையில்லை.

ஆக, கொரோனாத் தொற்றுக் காரணமாக ஒருவர் இறந்திருந்தாலும் அவரின் மரணச் சடங்கை அவரின் வீட்டில் வைத்து நடத்த முடியும் என்பது மேற்போந்த சுற்றுநிருபத்தின் அறிவித்தலாகவுள்ளது.

இந்தச் சுற்றுநிருபத்தை நினைக்கும்போது தான், கொரோனாவால் உயிரிழந்த அல்லது வேறு காரணத்தால் உயிரிழந்த நிலையில் அவருக்குப் பி.சி.ஆர் பொசிற்றிவ் என்று கூறி, அவரின் இறுதிச்சடங்கைச் செய்யவிடாமல் – அந்த இறுதி நேரத்திலும் உற்ற உறவுகள் அவரின் முகத்தைப் பார்க்கவிடாமல் தடுத்து, ஏதோ மரண தண்டனை வழங்கப்பட்ட ஒரு குற்றவாளியை தகனம் செய்வதுபோல பொலிஸார், பொதுசுகாதார பரிசோதகர்கள் கவச உடை அணிந்து சுற்றி நின்று காரியம் முடித்தனர்.

ஆனால், இப்போது இறப்பின்போது கொரோனாத் தொற்று இருந்தாலும் அவருக்குப் பி.சி,ஆர் பரிசோதனை செய்யாமல் இறுதிக்கிரியை செய்ய முடியும் என்பதாக நிலைமை மாறியுள்ளது.

இந்த முடிவுக்கு வந்த சுகாதாரத் தரப்பு; ஏலவே இறப்பின்போது கொரோனாத் தொற்று உடையவர்களுக்கும் ஏதோவொரு வகையில் உரிய சடங்குகளைச் செய்து, தகனம் செய்ய அனுமதித்திருந்தால் அன்று ஏற்படுத்திய அந்தத் தாக்கம் இன்றுவரை வாட்டுகின்ற கொடுமை இல்லாமல் போயிருக்கும்.

ஆம், ஒரு துறவியான பட்டினத்தடிகள் தன் தாய்க்குச் செய்த இறுதிச் சடங்கைக்கூட, செய்ய முடியாத அளவுக்கு மனிதநேயமற்றவர்கள் தடுத்து நின்றனர் என்பதை மட்டும் இங்குகூற முடியும்.

# பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து ஆவணம்

## இம்மாதத்திற்குள் உரிய தரப்பிடம் கையளிக்கப்படும்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தி, நாடளாவிய ரீதியில் சேகரிக்கப்படும் கையெழுத்துக்கள் அடங்கிய ஆவணத்தை, இந்த மாத இறுதிக்குள் உரிய தரப்பினரிடம் கையளிக்க உள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் கையெழுத்து போராட்டம், நேற்று யாழ்ப்பாணம் - அச்சுவேலி பிரதான பேருந்து நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கையெழுத்துப் போராட்டமானது, நாடளாவிய ரீதியில் இரண்டு வாரங்களுக்கு தொடரவுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ம)

# சொந்த மகனை கடத்திச் சென்ற நபர் பொலிஸாரால் சுட்டுக் கொலை

(கொழும்பு)

தனது பாட்டியின் பாதுகாப்பில் இருந்த 7 வயது சிறுவன் ஒருவனை கடத்திச் சென்ற சந்தேகநபர் ஒருவர் வெல்லம்பிட்டி பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கும் சந்தேகநபரான ஹொரண நீலகவிற்கும் இடையில் இடம்பெற்ற பரஸ்பர துப்பாக்கிச்சூட்டில் சந்தேகநபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கொலை உட்பட பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

ஹொரண நீலக என்ற சந்தேகநபர், குறித்த வீட்டிற்கு வந்து T-56 ரக துப்பாக்கியால் வானத்தை நோக்கிச் சுட்டு தனது சிறுவனை கடத்திச் சென்றுள்ளார்.

குறித்த நபர் கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு கூரிய ஆயுதத்தால் தனது மனைவியின் கைகால்களை துண்டுத் துண்டாக வெட்டி பலத்த காயம் ஏற்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## சஜித் - சம்பிக்கவை இணைப்பதற்கு சிரேஷ்ட உறுப்பினர்கள் முயற்சி

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவையும், சம்பிக்க ரணவக்கவையும் நேரில் சந்திக்க வைத்து முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சிரேஷ்ட உறுப்பினர்களின் முயற்சி கைகூடவில்லை என்று தெரியவருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சங்கமிக்கும் திட்டத்தில் இருந்த முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க, திடீரென "43 ஆம் படையணி" எனும் அரசியல் இயக்கத்தை ஆரம்பித்தார். குறித்த இயக்கத்தின் மாநாட்டையும் பெருமெடுப்பில் நடத்தியுள்ளார்.

2024 இல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே சம்பிக்க இவ்வாறு செயற்படுகின்றார் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. சம்பிக்கவின் சில நகர்வுகளால் அவர் மீது சஜித்தும் கடும் அதிருப்தியில் இருக்கின்றார்.

மாநாட்டின் பின்னர் சம்பிக்கவை சஜித் வெளிப்படையாகவே விமர்சிக்க ஆரம்பித்துள்ளார். இந்நிலை, தொடருமானால் எதிரணி பலவீனமடையும், இரண்டாக உடையும் என்பதால் இவ்விருவரையும் சமரசப்படுத்தும் முயற்சியில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் இறங்கியுள்ளனர்.

எனினும், அந்த முயற்சி இன்னும் கைகூடவில்லை எனத் தெரியவருகின்றது. (ம)

# மிருசுவிலில் விபத்து; ஒருவர் படுகாயம்

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் படை முகாம் முன்பாக ஏ9 வீதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஏ9 வீதி ஊடாக சென்ற மோட்டார் சைக்கிள் குறுக்கு வீதி ஒன்றினுள் திருப்ப முற்பட்ட வேளையில் பின்புறமாக வந்த ஹயஸ் வாகனம் மோதி குறித்த விபத்து சம்பவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற கொக்குவில் பகுதியைச் சேர்ந்தவர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

# வவுனியாவில் விபத்து; முதியவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா குருமன்காட்டில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துவிச்சக்கரவண்டியுடன் கப்ரக வாகனம் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கப்ரக வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணை வவுனியா பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேவேளை கப்ரக வாகனத்தை பொலிஸ் நிலையத்திற்கு பொலிஸார் கொண்டு சென்ற வேளை குருமன்காடு புகையிரத கடவை பகுதியில் மீண்டும் விபத்துக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது. (ம-299)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பாராட்டும் திறன்

உயர்ந்த மெய்யுணர்விலிருந்து வரும் பாராட்டு எப்போதும் மனநிறைவால் வருகிறது.

பாராட்டு மெய்யுணர்வை உயர்த்தி, உற்சாகத்தையும், ஆற்றலையும் தருகிறது என்பதில் சந்தேகமே இல்லை. அதே சமயம், அது இறுமாப்பையும் தரும். பாராட்டுதல் ஒரு திறமை.

உங்களை யாராவது, பாராட்டும் போது, வெட்கத்துடன் நெளிந்துச் செல்லாமல், அதை ஏற்றுக் கொள்கிறீர்களா? தயக்கமில்லாமல், பாராட்டை ஏற்றுக் கொள்வதும் ஒரு திறன் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

ஒரு மாவட்டத்திற்கும், மற்றொரு மாவட்டத்திற்கும், அரசாங்கத்தால் ஓர் எல்லைக்கல் அமைந்திருப்பது போல் விலங்கு கட்கும் மனிதனுக்கும் இடையில் இட்ட எல்லைக்கல் இறை வழிபாடாகும். இறைவழிபாடு இல்லாத மனிதன் விலங்கெனவும் இறைவழிபாடு செய்கின்ற விலங்கு தேவன் எனவும் உணர்க.

நாம் வீட்டை விட்டு புறப்படும் பொழுது மனைவி முதலியோரை நம்பித்தான் வெளியேறுகிறோம். மருத்துவசாலையில் கம்பவுண்டர் கொடுக்கின்ற மருந்தை நம்பித்தான் உண்கிறோம். இந்த மருந்து எந்தக் கம்பெனியில் செய்தது? யார் யார் உண்டு நலம் பெற்றார்கள்? நலம் பெற்றவர்கள் முகவரியைக் கொடுங்கள். அவர்களுக்கு எழுதிக் கேட்டுத் தெளிவு பெற்ற பின் மருந்தை உண்பேன் என்று எந்த நோயாளியாவது கூறுகின்றானா? மருத்துவரை நம்பித் தானே நோயாளி மருந்து உண்கின்றான்?

(தொடரும்)

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

80



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

### யுகங்கள்

யுகம் என்பது இந்துக்களின் கால கணிப்பு முறையில் காலத்தை அளக்கும் அலகுகளில் ஒன்று. யுகங்கள் நான்கு வகைப்படும். அவை கிருத யுகம், திரேதாயுகம், துவாபரயுகம் மற்றும் கலியுகம் ஆகும். ஒவ்வொன்றும் வெவ்வேறு கால அளவுகளைக் கொண்டன. இவற்றுள் சிறிய யுகமான கலியுகம் நான்கு இலட்சத்து முப்பத்து இரண்டாயிரம் (432,000) ஆண்டுகள் கொண்டது.

துவாபரயுகம் கலியுகத்திலும் இரண்டு மடங்கு கால அளவு கொண்டது. இது 864,000 ஆண்டுகளையும், கலியுகத்திலும் மூன்று மடங்கு பெரியதான திரேதாயுகம் 1,296,000 ஆண்டுகளையும் கொண்டன. கிருதயுகம் மொத்தம் 1,728,000 ஆண்டுகள் கொண்டது. இது கலியுகத்தின் நான்கு மடங்கு பெரியதாகும். கலியுகம் கி.மு.3102 இல் தொடங்கியதாக நம்பப்படுகிறது. இந்த 4 யுகங்களும் சேர்ந்தது (4,320,000 ஆண்டுகள்) ஒரு மகாயுகம் அல்லது சதுர்யுகம். 2000 சதுர்யுகம் சேர்ந்தது 1 நான்முகன் பேராயுள், 100 நான்முகன் பேராயுள் = 1 ஆதி நான்முகன் யுகம். 12 மகாயுகங்களைக் கொண்டது ஒரு மன்வந்திரம். 14 மன்வந்திரங்களைக் கொண்டது ஒரு கல்பம். இப்படியாக 30 கல்பங்கள் இருக்கின்றன.

அவ்வாறுள்ள 30 கல்பங்களும் (1) வாமதேவகல்பம், (2) ஸ்வேத வராககல்பம், (3) நீலலோகிதகல்பம், (4) ரந்தரகல்பம், (5) ரௌரவகல்பம், (6) தேவகல்பம், (7) விரககிருஷ்ணகல்பம், (8) கந்தற்பகல்பம், (9) சத்தியகல்பம், (10) ஈசானகல்பம், (11) தமம்கல்பம், (12) சாரஸ்வத கல்பம், (13) உதானகல்பம், (14) காருட கல்பம், (15) கௌரமகல்பம், (16) நரசிம்மகல்பம், (17) சமான கல்பம், (18) ஆக்நேயகல்பம், (19) சோம கல்பம், (20) மானவகல்பம், (21) தத்புருஷகல்பம், (22) வைகுண்டகல்பம், (23) லெச்சுமிகல்பம், (24) சாவித்ரிகல்பம், (25) கோரகல்பம், (26) வராஹகல்பம், (27) வைராஜ கல்பம், (28) கௌரி கல்பம், (29) மகோத்வரகல்பம், (30) பிதிர்கல்பம். இதில் தற்போது நடந்து கொண்டிருப்பது ஸ்வேத வராககல்பம் ஆகும்.

மேனாட்டு அறிவியல் சிந்தனைச் சுவடுகூடப் படாத சங்க காலத்திலேயே அறிவியல் அறிவும் உணர்வும் தமிழ் மண்ணில் வேர் விட்டிருந்தது.ஔவை திருக்குறளின் பெருமையை உரைக்கும் போது "அணுவைப் பிளந்து ஏழ்கடலைப் புகட்டி குறுக்கத் தறித்த குறள்" என்கிறார்.

பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஔவை அணுவைப் பற்றி அறிந்திருந்ததும் அணுவைப் பிளப்பது குறித்த பாடலில் கூறியிருப்பதும் வியப்பைத் தருகிறது. சேர் ஐசக் நியூட்டன் புவியீர்ப்பு விதிகளைக் கண்டுபிடித்தார்.

அதன்படி புறவிசைகள் இல்லையேல் இயங்கும் பொருள் இயங்கியபடியும், நிற்கும் பொருள் நின்றபடியும் கிடக்கும். அதாவது புறவிசை தாக்காவிடில் அவை அப்படியே கிடக்கும். இதனை 1300 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த மாணிக்க வாசகர் பாடியுள்ளார்.

"நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய் , நிற்பன நிறுவி
சொற்பதம் கடந்த மேலோன்"
என்று.

அறிவியலின் முதற்படி அளத்தல். அதிலும் தமிழ் தன் தனித் தன்மையைக் காட்டுகிறது. அணுவின் அளவைச் சொல்லாத காலத்தின் போதே தமிழன் அணுவின் அளவை நீட்டல் அளவை வாய்ப்பாட்டில் வகுத்து இருக்கிறார்கள்.

தமிழர் அளவுகள் பொருள்களை அளப்பதற்கு மட்டும் பயன் படவில்லை. வாழ்க்கையையும் அளந்தறிவதற்கு உறுதுணையாக உள்ளன. அளவுகள் வாழ்க்கைத் தத்துவங்களை எளிமையாக விளங்குவதற்காக முன்னோர்களால் எண்ணற்ற பழமொழிகளில், வசனங்களில் கூறியிருக்கிறார்கள்.

ஒருவன் அடக்கத்துடன் வாழ்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவன் வாழ்வில் பெருமை அடைவான். அடக்கமின்றி நடந்தால் சிறுமையே அடைவான். இதனை,

"காலால நடந்தால் காதவழி போகலாம்
தலையால நடந்தால் போக முடியுமா?" என்ற பழமொழி தெளிவுறுத்துகிறது.

இயல்பாகக் கால்களால் நடந்து போனால் நெடுந்தொலைவு வரை போகலாம். தலைகீழாக நடந்து சென்றால் சிறிது தூரம் வரைகூடப் போக முடியாது. அடக்கத்துடன் வாழ்ந்தால் நீண்ட நாள் புகழோடு வாழலாம். ஆனால் அடக்கமின்றி வாழ்ந்தால் நீண்ட நாள் வாழ முடியாது என்ற வாழ்க்கைத் தத்துவத்தை எளிமையாக இப்பழமொழி புலப்படுத்துகிறது.

கிட்ட இருந்தால் முட்டப்பகை, அகல உழுவதை விட ஆழ உழுவது மேல், அகலக் கால் வைப்பது ஆபத்து, அஞ்சாவது பெண் குழந்தை கெஞ்சினாலும் கிடைக்காது, அஞ்சில் வளையாதது ஐம்பதில் வளையுமா!, அஞ்சும் மூணும் அமைப்பாய் இருந்தால் அறியாப் பெண்ணும் கறி சமைப்பாள், அடக்கம் ஆயிரம் பொன்னுக்குச் சமம், அரைக் காசுக்குப் போன வெட்கம் ஆயிரம் கொடுத்தாலும் திரும்பாது போன்ற அளவைத் தொடர்பான தமிழர் எண்ணங்கள் சில நூற்றுக் கணக்கில் உள்ளன. (முற்றும்)

## மின் கட்டணத்தை செலுத்த தவறியோருக்கு மூன்று மாத கால அவகாசம்

(கொழும்பு)

**மின் கட்டணத்தை செலுத்தத் தவறிய நுகர்வோர் 3 மாதங்களுக்குள் தாமத கொடுப்பனவை செலுத்த தவறும் பட்சத்தில் மின் பாவனையாளர்களுக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்படும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

அதிகளவில் மின்சாரத்தை பயன்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு தேசிய கட்டமைப்பிலிருந்து இவர்களுக்கு கிடைக்கும் மின்சார விநியோகத்தை துண்டித்து, அவர்களிடம் காணப்படும் மின் பிறப்பாக்கிகளைப் பயன் படுத்தி மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கு மாறு இலங்கை மின்சார சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## வெளிநாடு செல்வோருக்கு நான்காவது டோஸ்

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு நாட்டின் தேவைக்கு ஏற்ப நான்காவது டோஸ் கொரோனா தடுப்பூசியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அவுஸ்திரேலியாவில் உயர் கல்விக்காகச் சென்ற மாணவர்கள் குழுவொன்றுக்கு முன்னரும் இவ்வாறான விசேட தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசி மற்றும் தடுப்பூசி திட்டங்கள் குறித்தும் வெளிவிவகார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக பணியகம் தெரிவித்துள்ளது. (நி)

## அதிக பணம் அச்சிடுவதே அரசின் அபிவிருத்தித் திட்டம் சஜித் சாடல்



(கொழும்பு)

திட்டம் இல்லாமல் பணம் அச்சடித்தமையே பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சம்மாந்துறையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மற்றும் அரசியல் சுதந்திரம் போன்ற அனைத்து உரிமைகளையும் அரசாங்கம் மீறுகிறது.

"பணம் அச்சிடுவதே தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டமாகும்.

திட்டம் இல்லாமல் பணத்தை அச்சடித்ததன் விளைவாக பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது. மூன்று வேளை உணவு பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் பொதுமக்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பொதுமக்கள் மீது சுமையை ஏற்றியதன் பின்னர் அரசாங்கம் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஊடாக 25 வீத மேலதிக வரி விதிப்பதன் மூலம் நிதி மோசடி செய்ய முயற்சிக்கிறது" என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27 பேர்...

அதன்படி, நாட்டில் இதுவரை 15,926 பேர் கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர். (ம)

## +1,235...

நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 633,051ஆக அதிகரித்துள்ளது. (ம)

## பிசிஆர்...

ளில் வெளிநாட்டுப் பிரஜைகளுக்கான பரிசோதனைக்காக ஐந்தாயிரம் ரூபா அறவிடப்பட்டு வந்ததுடன், இலங்கைப் பிரஜைகளுக்கு முதல் தடவை பரிசோதனை இலவசமாகவும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிலையில் இன்றுமுதல் சகலருக்கும் பிசிஆர் பரிசோதனைக்காக 6,500 ரூபாய் அறவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-18,33,104)

*(இது தொடர்பில் முன்னர் அறிவிக்கப்பட்ட செய்தி உள்ளே)*

## கச்சதீவுத்...

தேவானந்தா தெரிவித்தார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மயிலிட்டித் துறைமுகத்தின் இரண்டாம் கட்ட அபிவிருத்திப் பணிகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

500 பக்தர்களை அனுமதிப்பதாக யாழ்.மாவட்ட ரீதியாகத் தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும் இம்முறை யாத்திரிகர்களை அனுமதிப்பதில்லை எனவும் அருட்தந்தைகளின் பங்கேற்புடன் மாத்திரம் திருவிழாவை நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சரவைக்கு ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என்வும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-18,33,104)

## யாழில்...

பில் மேலும் தெரியவருவதாவது,

சித்தங்கேணிப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்த இனந்தெரியாத நபர்கள் அதிஷ்டலாபச் சீட்டில் பெருமளவு பணம் கிடைத்துள்ளது. இதனைப் பெறுவதற்கு 1 இலட்சத்து 90 ஆயிரம் ரூபா பணத்தை இலங்கை வங்கியில் வைப்பிலிடுமாறு கூறியுள்ளனர்.

இதனை நம்பிய குறித்த பெண்ணும் தன்னுடைய தங்க நகைகளை அடகு வைத்து பணத்தை இலங்கை வங்கியில் வைப்புச் செய்துள்ளார். பின்னர் தொலைபேசி இலக்கம் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த குறித்த பெண் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இதேபோன்று சங்கரத்தை, துணைவிப் பகுதியில் உள்ள ஆண் ஒருவருக்குத் தொலைபேசியில் தொடர்பு கொண்ட நபர்கள் வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொதி ஒன்று வந்துள்ளதாகவும் இதனைப் பெறுவதற்கு 60 ஆயிரம் ரூபாவை சம்பத் வங்கியில் வைப்பிலிடுமாறும் கூறியுள்ளனர். அவரும் அதனை நம்பிப் பணத்தை வைப்பிலிட்ட பின்னர் அந்த இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்திய நிலையில் அதுவும் துண்டிக்கப்பட்ட நிலையில் அவரும் மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (ம-18)

## யாழ். பல்கலை...

இன்று காலை 9 தொடக்கம் மாலை 4 மணிவரையான நேரத்திற்குள் மாணவர் ஒன்றியம் அமைப்பதாக உறுதிமொழியை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் போராட்டத்தை கைவிட்டு, பல்கலைக்கழகத்தின் நுழைவாயில்களை திறந்து விட்டு அங்கிருந்து கலைந்து சென்றுள்ளனர்.

அந்தவகையில் இன்றையதினம் பிரதான மாணவர் ஒன்றியமும், கலைப்பீட மாணவர் ஒன்றியமும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-18,33)

*(இது தொடர்பில் முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

## ஐ.நாவை...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“ஜெனிவாவில் இம்முறை இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளரின் எழுத்துமூல அறிக்கை மாத்திரமே முன்வைக்கப்படவுள்ளது. இலங்கைக்கு எதிராக எந்தப் பிரேரணைகளும் இம்முறை கொண்டு வரப்படமாட்டா.

ஏற்கனவே இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் தற்போது அலட்டிக்கொள்ள நாம் விரும்பவில்லை. ஏனெனில் அந்தத் தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தமது நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு அறிவித்துவிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இம்முறை இலங்கைக்கு எதிராக ஏதாவது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டால் அதை எதிர்கொள்ள நாம் தயாராகவே இருக்கின்றோம். நாட்டின் இறையாண்மையை மீறி எந்தத் தரப்பும் எமக்குச் சவால்விட முடியாது. நாமும் அடிபணியத் தயாரில்லை” என்றார். (ம)

## பயங்கரவாத...

அதேவேளை, குற்றவியல் வழக்கு ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணைகளில் இருந்து விலகிக்கொள்வதற்காக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை குறுக்கு வழியில் பயன்படுத்த வேண்டாம் எனவும் அரச தலைவர் கூறியுள்ளார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை பொறுப்பற்ற வகையில் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என அரசாங்கம் தெளிவாக ஆலோசனை வழங்கியுள்ளது எனக் கூறியுள்ள அமைச்சர் பீரிஸ், “நடக்கின்றதா இல்லையா என்பதை அறிய நாம் சந்தர்ப்பத்தை வழங்கி பார்ப்போம்” எனக் குறிப்பிட்டுள்ளார். (ம)

## அமை...

மான பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

இதனடிப்படையில், அந்தப் பிரச்சினைகள் தொடர்பில் யோசனைகளைத் தயாரித்து எதிர்வரும் 2ஆம் திகதி அரசிடம் கையளிக்க இந்த அணியினர் தீர்மானித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இது சம்பந்தமாக மற்றுமொரு சந்திப்பை அமைச்சர் விமல் வீரவன்ச அல்லது உதய கம்மன்பில ஆகியோரின் வீட்டில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (ம)

## அமைச்...

செய்துவரும் தொழில் அதிகாரிகள் எதிர்கொண்டுவரும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும் முகமாக தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா நாளை 19 ஆம் திகதி மற்றும் நாளை மறுதினம் 20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு செல்லவுள்ளார். (ம)

## பயங்கரவாத சட்...

ம்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை உடனடியாக நீக்குமாறு வலியுறுத்தி மக்களிடம் கையெழுத்துப் பெறும் மனுவில் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையும் கையெழுத்திட்டுள்ளார். இது தொடர்பில் அவரிடம் ஊடகங்கள் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தையடுத்து இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால், தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் நீதி வழங்கப்படவில்லை. குற்றவாளிகளைத் தப்பவிட்டு அப்பாவிகளைச் சிறையில் அடைத்தால் எப்படி நீதி கிடைக்கும்? அதனால்தான் இன்று நாம் சர்வதேசத்திடம் நீதி கோரி நிற்கின்றோம் என்றார். (ம)

மெகா பவர்
திகதி 17/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1029
O 25 03 15 51 60

ஹதஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.02.17
சீட்டிழுப்பு இலக்கம் 022
மேடம் 11 43 44 56 மேடம்

செவன
திகதி 17/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 357
H 37 55 60 63

மஹஜன சம்பத
திகதி 2022/02/17
சீட்டிழுப்பு இலக்கம் 4681
E 0 5 5 8 8 7

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 17.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2976
U 17 26 30 73

தன நிதானய
திகதி - 2022.02.17
சீட்டிழுப்பு இலக்கம் - 711
T 06 09 21 41

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.02.17
சீட்டிழுப்பு இல: 3819
வர்ணம்: சிவப்பு
ரூ. 4,954,660/-
வெற்றி இலக்கங்கள் 04 10 59 62 E

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1484
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.02.17
ரூ. 4,309,140/-
32 42 67 77 Y

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1658
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 17.02.2022
தினம் வியாழன்
K 07 45 46 77
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூபா 59,734,181/-

சம்வர்தன வாசனாவ
திகதி : 2022-02-17
வெற்றி வாரம் : 486 | வர்ணம் : சிவப்பு
ரூ.13,589,088/-
C 39 61 18 7
ரூ.2,783,980/-
ரூ.13,701,056/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,334,553/-
வெற்றி இலக்கங்கள் 03 35 43 52
திகதி 17.02.2022
சீட்டிழுப்பு வாரம் 3370
வர்ணம் கபில நிறம்
8309513
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,374,760/-

12
சீட்டிழுப்பு வாரம் 834
செம்மஞ்சள்
2022.02.17 வியாழக்கிழமை
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 18 21 26 27 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 213,840,763/-
011-2 333 546-47
Web : www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோர்வே பிரதிநிதி மன்னார் விஜயம்

நோர்வே நாட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டிரைன் ஜோரான்லி எஸ்கெடல் நேற்று மன்னாருக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

நேற்றுக் காலை 8.45 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு விஜயம் செய்த அவர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல்லுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

மன்னாரில் இடம்பெறும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தார். தொடர்ந்து மன்னாரில் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவைகள் குறித்தும் அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்து கொண்டார். (ம-285)

# கிழக்கில் இனிமேல் கூட்டணி இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி

எந்தவொரு தேர்தலாயினும் எதிர் வரும் காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி கிழக்கு மாகாணத்தில் தனித்தே போட்டியிடும் என்று கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது,,

"இனிவரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி விட்ட தவறுகளை ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் செய்யமாட்டாது. நாட்டிலுள்ள 160 தொகுதிகளுக்கும் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அந்தந்தத் தொகுதி அமைப்பாளர்களே பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாக நியமிக்கப்படுவர். கட்சி சம்பந்தப்பட்ட எந்த வேலைத்திட்டமாயினும் அமைப்பாளர் ஊடாகவே முன்னெடுக்கப்படும்.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் போன்ற கட்சிகள் எம்முடன் இணைந்து எமது வேட்பாளர் பட்டியலில் போட்டியிட்டு, எமது ஆதரவாளர்களினதும் வாக்குகளைப் பெற்று, வெற்றிபெற்ற பின்னர் அவர்கள் அரசில் இணைந்து விடுகின்றனர்.

இதனால் பாராளுமன்றத்தில் எமது கட்சியின் பலம் மலினப்படுத்தப்படுகின்றது. மாற்றுக் கட்சியினருக்கு வாய்ப்பளிப்பதால் எமது கட்சி ஆதரவாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். இனி வரும் எந்தவொரு தேர்தலிலும் இவ்வாறான தவறுகள் நடக்க இடமளிக்க மாட்டோம் என்று உறுதியளிக்கின்றேன். இந்த விடயத்தில் கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மிகவும் உறுதியாக இருக்கின்றார் என்றார். (ம)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 14 அடி பாதையுடன்
- தேவைக்கேற்ப பிரித்துக்கொடுக்கப்படும்
- நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்
- பயன்தரும் 137 தென்னைகள் உள்ளன
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்)

தரகர் தேவையில்லை

ஒரு பரப்பின் விலை 3,50,000/=

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தொடர்பு
077 814 7389, 077 117 8578

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 22 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- A32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்

ஒரு பரப்பின் விலை 3,00,000/=

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை

தொடர்பு
077 814 7389, 077 117 8578

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மறவன்புலவு பகுதியில் மறவன்புலவு மத்தி, அம்மன் கோயிலடியில் 4 பரப்புக் காணி புதிதாக அமைக்கப்பட்ட வீட்டுடன் விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

A32 பிரதான வீதியில் இருந்து 600 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (10245)

தொடர்பு
077 814 7389, 077 117 8578

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம். (வாகையடி சந்தி) (10252)

074 269 0854

## பில் கிளாக் தேவை

வவுனியா நகர்ப்புறத்தில் இயங்கும் எமது கடைக்கு கணனி அறிவுள்ள பில் கிளாக் தேவை. வயது எல்லை 18 தொடக்கம் 30 வரை. மாத வேதனமாக 17,000/= தொடக்கம் 25,000/= வரை வழங்கப்படும். (வவுனியாவில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.)

தொடர்பு (10249)
077 311 2250

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கு, பலாலி வீதி, வீரகத்திப்பிள்ளையார் கோவிலில் இருந்து 50m தூரத்தில் உள்ள 8 பரப்பு காணி 2 பரப்பாக பிரித்து விற்கப்படும்.
(கனேசா வித்தியாலயத்திற்கு அருகில்)
விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (10221)

076 940 1045

## பெண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை.
வயது எல்லை : 18 தொடக்கம் 35 வரை.
வேலை நேரம் : காலை 7.30 மணி - மாலை 5 மணி வரை.
மாத வேதனமாக 17,000/= - 30,000/= வரை வழங்கப்படும்.

தொடர்பு (10248)
074 049 0003

## போட்டிப் பரீட்சை நேரடி வகுப்புக்கள்

ஆரம்பம்:
சனி (19/2)
9 am - 2 pm
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
+++++++++
யாழ். ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கியருகில்

தவசேகர் வளவாளர் குழு
SLIRS, SLEAS, SLAS, SLPS, SLAcS, SLAgr, LL.B, GS, MSO, Teaching

சகல பரீட்சைகளுக்குமான வினாத்தாள்களுக்கும் சகல விபரங்களுக்கும் (C-3800)
T.P/whatsapp
076 688 3394

## வெற்றித்தேர்வு வெளியீட்டகம் நடாத்தும்

### புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்படுத்தும்

### 2022 - தரம் 3, தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான

கடினமான வினாக்களை உள்ளடக்கி வெளிவரும்
முதற்தர மாதிரி வினாப்பத்திரம்

வெற்றித்தேர்வு தொடர் போட்டிப் பரீட்சைகளும், வினாத்தாள்களை தெளிவுபடுத்தும் வினாவிடை வகுப்புகளும் ஆரம்பம்

பரீட்சை நாள் – ஞாயிற்றுக்கிழமை

பரீட்சை நிலையம் – நல்லூர் சயன்ஸ் அக்கடமி (முருகன் ஆலயம் முன்பாக)

பரீட்சை நேரங்கள் – காலை 6.00 - 8.15, காலை 8.30 - 10.45, காலை 11.00 - 1.15, மதியம் 1.30 - 3.45, மாலை 4.00 - 6.15

விரும்பிய நேரங்களில் பரீட்சைகள் எழுதலாம்

தரம் 3, தரம் 4, தரம் 5 முதலாவது பரீட்சை 20.02.2022

அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க வெற்றித்தேர்வு பரீட்சை எழுதும் மாணவர்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வினாத்தாள்களை வெற்றித்தேர்வு வளவாளர்களால் தெளிவுபடுத்தப்படும்

விசேட வினாவிடை வகுப்புகள்

வினாவிடை வகுப்பு – சனிக்கிழமை

தரம் - 3 காலை 10.00 - 12.00, தரம் - 4 மதியம் 12.30 - 2.30, தரம் - 5 மாலை 3.00 - 5.30

முதலாவது வினாவிடை வகுப்பு 26.02.2022

பரீட்சைப் பெறுபேறுகள் தரப்படுத்தலுடன் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்படும்.
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் வெற்றித்தேர்வு வெற்றியாளர்களாக கௌரவிக்கப்படுவர்.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (C-3798)

"வெற்றித்தேர்வு வெற்றியாளர்களின் தெரிவு" 0775388471 0773126807

## மணமகன் தேவை

92, றோமன் கத்தோலிக்க மணமகள்.
படித்த மணமகன் தேவை.
துர்க்கா திருமண சேவை
077 818 5978

## மணமகள் தேவை

70, திருவாதிரை 7 செவ்வாய், நோர்வே, விவாகரத்து மணமகன், விவாகரத்துப் பெற்ற மணமகள் தேவை. (10250)
துர்க்கா திருமண சேவை
077 818 5978

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம், புத்தூர், கோப்பாய், நெல்லியடி, கொடிகாமம், மானிப்பாய், புதுக்குடியிருப்பு, சுன்னாகம், கிளிநொச்சி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி (C-3785)

0768226240 DHL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.